# ප්‍රගති වාර්තාව
# முன்னேற்ற அறிக்கை
# Progress Report

## 2024



**මහජන ආරක්ෂක සහ පාර්ලිමේන්තු කටයුතු අමාත්‍යාංශය**

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு

Ministry of Public Security and Parliamentary Affairs

# முன்னேற்ற அறிக்கை
# 2024

**பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு**

**18 வது தளம், சுகுறுபாய, ஸ்ரீ சுபூதிபுர வீதி, பத்தரமுல்ல**

**கௌரவ அமைச்சரின் செய்தி...**



வினைத்திறனாகவும், நட்புறவுடனும் பொதுமக்களுக்கான சேவைகளை வழங்கி, போதைப்பொருள் பாவனை மற்றும் அச்சம், சந்தேகம் இன்றி சட்டரீதியான பிரஜைகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் சமூகத்தை உருவாக்குதல் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சின் விடயப்பரப்பாகும். அதற்காக பங்களிப்பு வழங்கும் விஷேட நிறுவனங்களான ஸ்ரீலங்கா பொலீஸ், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம், அபாயகரமான ஔடத கட்டுப்பாட்டுத் தேசிய சபை, அரச சார்பற்ற அமைப்புகளைப் பதிவுசெய்யும் செயலகம், பாராளுமன்ற விவகார பிரிவு ஆகியவை இந்த அமைச்சின் கீழ் செயற்படுகின்றன. அரச கொள்கைகளுக்கு ஏற்ற வகையில் நவீன உலகுக்கு பொருந்தும் சமூக மற்றும் பொருளாதார கொள்கைகளைத் தயாரிக்கும் அரசின் முதன்மையான குறிக்கோளை அடைவதற்காக இந்த அமைச்சுக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள விஷேடமான பணிப்பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறது. 2024 ஆண்டுக்காக அரசினால் வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளிலிருந்து 2024 டிசம்பர் 31 திகதி வரை செய்யப்பட்ட கருமங்களின் முன்னேற்றம் அடங்கிய 2025 வரவுசெலவுத் திட்ட குழுநிலை விவாதத்தின் போது சமர்ப்பிக்கப்படும் ''முன்னேற்ற அறிக்கை'' வெளியீட்டில் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சர் என்ற ரீதியில் செய்தியை வழங்க வாய்ப்புக் கிடைத்தது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். நாட்டு மக்கள் அனைவரும் அச்சம், சந்தேகம் இன்றி உயிர்வாழக் கூடிய தேசத்தை உருவாக்கும் போது போதைப்பொருள் தொல்லை, திட்டமிடப்பட்ட குற்றங்கள், கொள்ளைகள், சிறுவர் துஸ்பிரயோகம் மற்றும் பாலியல் வல்லுறவு போன்றவற்றை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் எனது அமைச்சுக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள விஷேட முன்னுரிமையாகும் என்பதுடன், அது பிரதான அடத்தைப் பெறுகிறது. அத்துடன் நாட்டில் வீதி விபத்துக்கள் காரணமாக ஏற்படும் உயிர்ச்சேதங்கள், அங்கவீனமடைதல் மற்றும் சொத்து இழப்புக்களைக் குறைத்து முறையான போக்குவரத்து கட்டுப்பாட்டுத் திட்டத்தை நிறுவுதலும் எமது அமைச்சுக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள முதன்மைக் கருமமாகும். சமகாலத்துக்கு பொருந்து முகாமைத்துவ முறைமை மற்றும் நவீன தொழில்நுட்பத்துடன் டிஜிற்றல்மயமாக்கல் ஊடாக பயனுள்ள, தரமான சேவைகளை மக்களுக்கு வழங்குவதற்காகவும், அதன்மூலம் தற்போது இடம்பெறும் வாகன விபத்துக்களைக் குறைப்பதற்கும் தேவையான தந்திரோபாய திட்டம் அடையாளம் கண்டு அமுல்படுத்தப்படுகிறது.

அத்துடன் தமது கருமங்களை சிறந்த வினைத்திறனுடன் நிறைவேற்றி, குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் குடிவரவு மற்றும் குடியகல்வு தொடர்பான கருமங்களை நிறைவேற்றுகிறது. ஆபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டு தேசிய சபை அபாயகரமான ஔடத துர்ப்பாவனையை தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தலுக்காக பல்வேறு நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி தனது சேவையை ஆற்றுகிறது. ஆத்துடன் இலங்கையில் இயங்குநிலையிலுள்ள அனைத்து அரச சார்பற்ற அமைப்புகளையும் பதிவுசெய்தல், முறைமைப்படுத்தல் மற்றும் அரச கொள்கைகளுடன் அந்த அமைப்புகள் செயற்படுவதனை நிச்சயித்தல் அரச சார்பற்ற அமைப்புகள் தொடர்பான தேசிய செயலகத்தினால் மேற்கொள்ளப்படுகிறது.

பொதுமக்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல், போதைப்பொருட்களை ஒழித்தல், பிரஜைகளின் அடையாளத்தை உறுதிப்படுத்துதல் மூலம் பாதுகாப்பான நாட்டை உருவாக்குவதற்குத் தேவையான பொதுமக்களுக்கான சேவைகளை நிறைவேற்றும் எனது அமைச்சின் கீழுள்ள அனைத்து நிறுவனங்களிலும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நிறுவன செயற்பாடுகளை மிகவும் வினைத்திறாக அமுல்படுத்துவதற்குத் தேவையான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்திட்டங்களை வகுத்தல் மற்றும் அமுல்படுத்துதல், தொடராய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்குத் தேவையான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்த பாரதூரமான பொறுப்பை நிறைவேற்றுவதற்காக எனக்கு தலைமைத்துவம் வழங்கும் கௌரவு ஜனாதிபதிக்கும், கௌரவ பிரதமருக்கும் எனது விஷேட நன்றியை தெரிவிக்கும் அதேவேளை அர்ப்பணிப்புடன் செயற்படும் பிரதி அமைச்சருக்கும், அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அமைச்சின் பணிக்குழுவினர், நிறுவன பிரதானிகள் உள்ளிட்ட அனைத்து நிறுவங்களின் பணிக்குழுவினருக்கும் எனது மனப்பூர்வமான நன்றியை தெரிவிப்பதுடன், சுபீட்சமான நாடு அழகிய வாழ்க்கையை உருவாக்குவதற்கான எதிர்காலத் திட்டங்கள் வெற்றிபெறச் செய்வதற்கு அனைவரும் உயர்ந்தளவு ஒத்துழைப்பை வழங்குவார்கள் என எதிர்பார்க்கிறேன்.

**ஆனந்த விஜேபால (பா.உ)**
பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சர்

**கௌரவ பிரதி அமைச்சரின் செய்தி...**



இலங்கையில் சட்டத்தையும், சமாதானத்தையும் பாதுகாத்து தாய்நாட்டின் சமூக ஒழுக்கத்தை உறுதிப்படுத்தி மனிதர்கள் அச்சம், சந்தேகம் இன்றி மகிழ்ச்சியாக உயிர்வாழ்வதற்கான சூழமைவை உருவாக்கும் பிரதான பொறுப்பு மற்றும் பொதுமக்களுக்கு அத்தியாவசியமாக தேவையான ஏனைய சேவைகளை வழங்கும் பொறுப்புகள் ஒப்படைக்கப்படும் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சின் மூலம் 2025 விரவுசெலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் சமர்ப்பிக்கும் வெளியீட்டுக்கு செய்தி வழங்க வாய்ப்புக் கிடைத்தமை தொடர்பில் இந்த அமைச்சின் பிரதி அமைச்சர் என்ற ரீதியில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த உலகில் பிறக்கும் பிள்ளையை சமூகமயப்படுத்துவதற்காக பெற்றோர், வயதுவந்தோர், பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் சமய அமைப்புகளுக்கும் உரித்தளிக்கப்பட்டுள்ள பொறுப்புகள் சிறியதல்ல. அவ்வாறு சமூகமயப்படுத்தப்படும் பிள்ளைகளில் சிலரின் மனப்பாங்கில் ஏற்படும் குறைபாடுகள் காரணமாகவும், தற்போதுள்ள சமூக ஒழுக்கநெறிகளைப் பின்பற்றாமல் தவறான செயற்பாடுகளுக்கு பழக்கப்பட்டு சமூக விரோதிகளாக சமூகமயப்படுத்தப்படுகின்றனர். அவ்வாறு சட்டத்தை மதிக்காமல் செயற்படுவர்களை சட்ட ரீதியான வரையறைக்குள் கொண்டுவந்து சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒழுக்கநெறிகளுக்கு ஏற்ற வகையில் வாழும் நபராக மாற்றி சிறந்த சமூகத்தை உருவாக்குதல் பாரதூரமான கருமமாகும்.

துவறிழைத்த ஒருவர் மீது சட்டத்தை அமுல்படுத்துதல் என்பது நபருக்கு உடல் ரீதியாக மற்றும் உள ரீதியாக தண்டனை விதித்தல் மட்டுமன்றி தான் செய்த தவறு மற்றும் அதலிருந்து விடுபடுதல் தொடர்பான தெளிவான புரிதல் வழங்கப்படுகிறது. தண்டனை கிடைத்த பின்னர் சமூகமயப்படுத்தப்படும் நபருக்கு நேர்மயமான மற்றும் நட்புறவான வரவேற்புடன் வாழ்க்கைக்கு முகங்கொடுக்கும் எதிர்பார்ப்பையும் உள்ளடக்கி, மீண்டும் அந்த தவறை மேற்கொள்ளாதிருப்பதற்கும், தவறு ஏற்படும் போது அதற்கு வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கும் உந்துசக்தியாக அமையும். சமூகத்தில் சட்டத்தை நிறுவுதலும், சமூக செயற்பாட்டின் இறுதியானதும், தெளிவானதுமான குறிக்கோளாக இருத்தல் வேண்டும் என நம்புகிறேன். இருந்த போதிலும் எழுத்துமூல சட்டத்தில் என்ன எழுதப்பட்டிருந்தாலும் அனைத்து நபர்களுக்கும் மனிதாபிமான பெறுமானம் வழங்கப்பட்டால் எமது சமூகம் இதனை விடவும் சிறந்த இடத்துக்கு வருவதனை எவராலும் தடுக்க இயலாது.

அத்துடன் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் இயங்கும் அனைத்து நிறுவனங்களும் தமது கருமங்களை நல்ல வினைத்திறனுடன் நிறைவேற்றி நாட்டில் சட்டம் மற்றும் சமாதானத்தை நிறுவி அனைத்து பிரஜைகளுக்கும் சமத்துவமாக அச்சம், சந்தேகமின்றி உயிர்வாழ்வதற்கான சூழமைவை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சமகாலத்துக்கு பொருந்தும் முகாமைத்துவ முறைமைகள் மற்றும் நவீன தொழில்நுட்பத்துடன் டிஜிற்றல்மயமாக்கல் ஊடாக பயனுள்ள, தரமான சேவைகளை மக்களுக்கு வழங்குவதற்கும், அதன்மூலம் தற்போது இடம்பெறும் ஊழல், மோசடிகளைத் தடுத்து பொருளாதாரத்துக்கு பங்களிப்புச் செய்வதற்கு தேவையான தந்திரோபாய திட்டம் இனங்காணப்பட்டு அமுல்படுத்தப்படுகிறது.
2025 ஆடில் இந்த பாரிய செயன்முறையை வெற்றிகரமாக அமுல்படுத்துவதற்கு எனக்கு தலைமைத்துவம் வழங்கும் கௌரவு ஜனாதிபதிக்கும், கௌரவ பிரதமருக்கும், அமைச்சருக்கும், அதற்காக வினைத்திறனாக பங்களிப்பு வழங்கி செயற்படும் அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அமைச்சின் பணிக்குழுவினருக்கு நன்றி தெரிவிப்பதுடன், புதிய தொழில்நுட்பத்துடன் இணைந்த பயங்கரமான குற்ற அலையின் சிக்கலான தன்மைக்கு நேரடியாக முகங்கொடுத்து குற்றவாளிகளின் அனைத்து சவால்களுக்கும் வெற்றிகரமாக முகங்கொடுத்து மனிதம் நிறைந்த சமூகத்தை உருவாக்குவதற்காக இரவு பகல் பாராது உழைக்கும் பொலீஸ் மா அதிபர் உள்ளிட்ட அலுவலர்கள் மற்றும் அமைச்சுக்குரிய ஏனைய நிறுவனங்களின் பிரதானிகள் உள்ளிட்ட பணிக்குழவினருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்.

**சட்டத்தரணி சுனில் வட்டகல** (பா.உ)
பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார பிரதி அமைச்சர்

**செயலாளரின் செய்தி...**



2025 விரவுசெலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் சமர்ப்பிக்கும் "முன்னேற்ற அறிக்கை 2024" வெளியீட்டில் 2022 பெப்ரவரி 07 திகதிய 2300/24 இலக்க மற்றும் 2024 பெப்ரவரி 07 திகதிய இலக்க இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அதிவிஷேட வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்ட பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு மற்றும் அதன்கீழ் இயங்கும் நிறுவனங்களின் 2024 ஆண்டு டிசம்பர் 31 திகதி வரை அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் 2025 பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சு அமுல்படுத்த எதிர்பார்க்கும் செயற்திட்டங்களின் சாராம்சம் அடிப்படையாக உள்ளடங்குகிறது.

இந்த அமைச்சுக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள கருமங்கள் மற்றும் பணிகளை நன்றாக நிர்வகித்து, விடயத்துக்குப் பொறுப்பான கௌரவ அமைச்சர் மற்றும் கௌரவ பிரதி அமைச்சரின் தலைமைத்துவம் மற்றும் வழிகாட்டலில் தொடர்புடைய நிறுவனங்களுடன் இணைந்து 2024 ஆண்டில் செயற்பாட்டுத் திட்டத்தில் அடங்கியுள்ள விஷேடமான பெருமளவான கருமங்கள் டிசம்பர் 31 திகதியளவில் நிறைவேற்றக்கூடியதாக இருந்தமை நாம் கூட்டாக பெற்ற வெற்றியாகும். வீண்விரயம் மற்றும் ஊழலை ஒழித்து உன்னதமான உற்பத்தித்திறனை அடைவதற்காக மனித மற்றுழ் பௌதீக வளங்களை வினைத்திறனாகவும், பயனுள்ள வகையிலும் முகாமைத்துவம் செய்து அமைச்சு மற்றும் அதன்கீழுள்ள நிறுவனங்கள் நெறிப்படுத்தப்படுகின்றன.

அரசானால் அமுல்படுத்தப்படும் தேசிய கொள்கைகளின் அடிப்படையில் அமைச்சின் விடயப் பரப்புக்குரிய நிறுவனங்களுக்கு சட்டங்கள் மூலம் வழங்கப்பட்டுள்ள சட்ட ரீதியான ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ற வகையில் நிறைவேற்றப்படும் பொது மக்களுக்கான சேவைகளை வினைத்திறனாகவும், பயனுள்ள வகையிலும் நிறைவேற்றுதல் அமைச்சின் முதன்மைக் கருமமாகும். பொதுமக்கள் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக தீவிரவாத மற்றும் பயங்கரவாத செயற்பாடுகளை தடுப்பதற்கான செயற்பாடுகளை ஒடுக்குதல், சமூக விரோத குற்றங்களை ஒடுக்குதல், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் செயற்திட்டத்தை தயாரித்தல், போக்குவரத்தை இலகுபடுத்துவதற்காக முறையான வாகன போக்குவரத்து திட்டம் மற்றும் முறைமைப்படுத்தல் முறைமை, அதனுடன் தொடர்புடைய சட்ட கட்டமைப்பை பலப்படுத்துதல் ஆகிய விஷேடமான கருமங்களை மேற்கொள்ளும் ஸ்ரீலங்கா பொலீஸ் மற்றும் விஷேட அதிரடிப்படை, அபாயகரமான ஔடத கட்டுப்பாட்டு தேசிய சபை ஆகியவற்றுடன் இணைந்து போதைப்பொருளிலிருந்து சமூகத்தை விடுவிப்பதற்காக செயற்படுகிறது.

குடிவரவு, குடியகல்வு செயற்பாடுகளை மிகவும் வினைத்திறனாகவும், நட்புறவாகவும் நிறைவேற்றி கடவுச்சீட்டு, வீசா மற்றும் இரட்டைப் பிரஜாவுரிமை வழங்குதல் தொடர்பான பல கருமங்களை குடிவரவு, குடியகல்வு திணைக்களம் மேற்கொள்கிறது. தமது தேசத்தினுள் அனைத்து மக்களுக்கும் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக, அனைத்து பிரதேசங்களுக்கும் தமது சேவைகளை வழங்கி ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களம் அடையாள அட்டை வழங்கும் கருத்துடன் தொடர்புடைய செயற்பாடுகளை மேற்கொள்கிறது. அபாயகரமான ஔடத கட்டுப்பாட்டு தேசிய சபை மூலம் அபாகரமான ஔடத துர்பாவனையை தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துவதற்கான தேசிய கொள்கைகள் அமுல்படுத்தப்படுவதன் ஊடாக போதைப்பொருள் பாவனை மற்றும் அபாயகரமான ஔடத துர்பாவனையை தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அத்துடன் அரச சார்பற்ற அமைப்புகளை பதிவுசெய்தல் மற்றும் அரச கொள்கைகளுக்கு உட்பட்டு அந்த அமைப்புகள் செயற்படுதலை நிச்சயித்தல் அரச சார்பற்ற அமைப்புகள் தொடர்பான தேசிய செயலகத்தால் மேற்கொள்ளப்படுகிறது.

இவ்வாறானா பாரதூரமான கருமங்களை நிறைவேற்றுவதற்காக தொடர்புடைய கொள்கைகள், தந்திரோபாயங்கள், செயற்திட்டங்களை வகுப்பதற்கும், அமுல்படுத்துவதற்குழ், தொடராய்வு செய்வதற்கும், மதிப்பீடு செய்வதற்கும் தகுந்த வழிகாட்டல்களை வழங்கும் கௌரவ அமைச்சர் மற்றும் கௌரவ பிரதி அமைச்சர் ஆகியோருக்கு இவ்வேளையில் வாழ்த்து தெரிவிக்கிறேன். அத்துடன் அமைச்சின் ஆளணியினருக்கும், அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களின் பிரதானிகள் மற்றும் ஒட்டுமொத்த ஆளணியினருக்கும் எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன், எதிர்காலத்திலும் அமைச்சுக்கான திட்டங்கள் வெற்றியடைவதற்காக அனைவரினதும் ஒத்துழைப்பை உயர்ந்தளவு வழங்குவீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

**டி.டபிள்யூ..ஆர்.பி. செனவிரத்ன,**
**செயலாளர்**

## உள்ளடக்கம்


| | பக்க இல |
|---|---|
| 01. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு | 01 |
| 1.1 அறிமுகம் | 01 - 04 |
| 1.2 அமைச்சு செயற்பாடுகளின் முன்னேற்றம் | 05 - 07 |
| 1.2.1. பொதுமக்களின் குறைகளை விரைவாக நிவர்த்தி செய்தல் | 08 |
| 1.2.2. அபிவிருத்தி திட்டங்களைக் கண்காணித்தல் | 08 - 09 |
| 1.2.3. பரஸ்பர ஒத்துழைப்பை அடைதல் | 09 - 10 |
| 1.3. நிதி முன்னேற்றம் | 10 |
| 1.4. அமைச்சின் இடைக்கால இலக்குகள் 2025 - 2027 | 10 |
| 02. அமைச்சின் கீழ் செயற்படும் நிறுவனங்கள் | 11 |
| 2.1. ஸ்ரீ லங்கா பொலிஸ் | 11 |
| 2.1.1. அறிமுகம் | 11 |
| 2.1.2. ஸ்ரீ லங்கா பொலிஸ் செயற்பாடுகளின் முன்னேற்றம் | 12 - 17 |
| 2.1.3. அபிவிருத்தி செயற்பாடுகளின் முன்னேற்றம் | 17 |
| 2.1.4. 2024 வருடத்தில் செயற்படுத்தப்பட்ட செயற்பாடுகள் | 18 |
| 2.1.5. நிதி முன்னேற்றம் | 19 |
| 2.1.6. நிறுவனத்தின் இடைக்கால இலக்குகள் 2025-2027 | 19 - 20 |
| 2.2. விசேட அதிரடிப்படை | 21 |
| 2.2.1. அறிமுகம் | 21 |
| 2.2.2. விசேட அதிரடிப்படையின் செயற்பாடுகளின் முன்னேற்றம் | 22 - 25 |
| 2.2.3. நிதி முன்னேற்றம் | 25 |
| 2.2.4. நிறுவனத்தின் இடைக்கால இலக்குகள் 2025 - 2027 | 25 |
| 2.3. குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் | 26 |
| 2.3.1. அறிமுகம் | 26 |
| 2.3.2. திணைக்கள நடவடிக்கைகளின் முன்னேற்றம் | 26 - 29 |
| 2.3.3. நிதி முன்னேற்றம் | 30 |
| 2.3.4. நிறுவனத்தின் இடைக்கால இலக்குகள் 2025 - 2027 | 30 - 31 |
| 2.4. ஆட்களை பதிவுச் செய்யும் திணைக்களம் | 32 |
| 2.4.1. அறிமுகம் | 32 |
| 2.4.2. திணைக்கள நடவடிக்கைகளின் முன்னேற்றம் | 32 - 38 |
| 2.4.3. நிதி முன்னேற்றம் | 38 |
| 2.4.4. நிறுவனத்தின் இடைக்கால இலக்குகள் 2025 - 2027 | 38 - 39 |
| 2.5. அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பான தேசிய செயலகம் | 40 |
| 2.5.1. அறிமுகம் | 40 |
| 2.5.2. செயலக நடவடிக்கைகளின் முன்னேற்றம் | 40 - 42 |
| 2.5.3. நிதி முன்னேற்றம் | 43 |
| 2.5.4. நிறுவனத்தின் இடைக்கால இலக்குகள் 2025 - 2027 | 43 |
| 2.6. தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை | 44 |
| 2.6.1. அறிமுகம் | 44 |
| 2.6.2. சபை காலாண்டு முன்னேற்றம் | 44 - 49 |
| 2.6.3. நிதி முன்னேற்றம் | 49 |

## 01. பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு

### 1.1.அறிமுகம்

2020-11-20 ஆம் திகதி 2202/25 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் உள்ளக பாதுகாப்புத் துறையின் விடயப் பரப்பைத் திருத்தம் செய்து அமைச்சரவை அமைச்சாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு நிறுவப்பட்டது. அன்றிலிருந்து பல சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் விடயப் பரப்பு திருத்தம் செய்யப்பட்டது. அரசின் கொள்கைகளுக்கு ஏற்புடையதாக 2024 ஆம் ஆண்டுக்கு தயாரிக்கப்பட்ட திட்டங்களுக்கு அமைய பொதுமக்கள் சேவைகளை திறமையான மற்றும் பொது மக்களுக்கு உகந்த முறையில் பராமரித்து கொண்டு நாட்டிலுள்ள அனைத்துப் பிரஜைகளும் பயம், சந்தேகம் இன்றி சுதந்திரமாக வாழ்வதற்கு பொருத்தமான சூழலை உருவாக்குவதன் மூலம் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்தல், சட்டம் மற்றும் ஒழுங்கை பேணுதல், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நபர்களுக்கான குடிவரவு மற்றும் குடியகல்வு நடவடிக்கைகளை எளிதாக்குதல், தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்த நாட்டில் செயல்படும் அரச சார்பற்ற அமைப்புகளின் வலையமைப்பை ஒழுங்குபடுத்துதல் மற்றும் போதைப்பொருள் அச்சுறுத்தலை எதிர்த்துப் போராடுதல் ஆகியவற்றிற்கு அமைச்சும் அதன் கீழுள்ள நிறுவனங்களும் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

அதற்கமைய, பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவலகள் அமைச்சுக்கு உரித்தளிக்கப்பட்ட பிரதானமான பொறுப்பான பயம், சந்தேகமின்றி பிரஜைகள் சுதந்திரமாக வாழ்வதற்கு உகந்த சூழலை உருவாக்குதல், பிரஜை அடையாளப்படுத்தல், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உறுதிப்படுத்தல், போதைப்பொருள் அச்சுறுத்தல் மற்றும் ஆபத்தான போதைப்பொருட்களின் பயன்பாட்டை துஸ்பிரயோகத்தைத் தடுத்தல் மற்றும் நாட்டில் செயல்படும் உள்நாட்டு மற்றும் சர்வதேச அரசு சாரா நிறுவனங்கள் அரச கொள்கைகளை செயல்படுத்துவதன் மூலம் சட்டத்தை மதிக்கும் பிரஜைகளைக் கொண்ட சமூகத்தை உருவாக்க அமைச்சினால் தயாரிக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களுகமைய செயற்பட அனைத்து நிறுவனங்களும் செயற்படுகின்றன.

விஷேடமாக பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவலகள் அமைச்சு தற்போது ஸ்ரீ லங்கா பொலீஸ் அலுவலர்களின் நீண்ட காலமாக தீர்க்கப்படாதிருந்த பதவி உயர்வு மற்றும் பயிற்றுவிக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் அவர்களுக்காக தொழில்நுட்ப மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளைப் போதுமானளவு வழங்குவதற்கும் விஷேடமாக கவனம் செலுத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதுடன், அதன் மூலம் பொதுமக்களுக்கு நட்புமிக்க சேவைகளை ஸ்ரீ லங்கா பொலீஸ் ஊடாக நிறைவேற்ற எதிர்பார்க்கப்படுகிறது.

ஒட்டுமொத்தமாக, அமைச்சின் கீழ் இயங்கும் அனைத்து நிறுவனங்களும் பொதுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், தனிப்பட்ட அடையாளத்தை உறுதி செய்யும் பொது மக்கள் சேவைகளை திறமையான மற்றும் நட்பு முறையில் பராமரிப்பதற்கும் செயற்படுகின்றன. இதற்காக தேவையான திட்டங்களைத் தயாரித்தல், செயல்படுத்தல் மற்றும் நெறிப்படுத்துவதன் மூலம் அமைச்சின் முக்கிய பணிகளை நிறைவேற்றுவதன் மூலம் நாட்டின் அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்கு ஆதரவை வழங்கி வருகின்றது. இதற்காக, கொள்கை உருவாக்கம், வழிகாட்டுதல், செயல்படுத்தல், கண்காணிப்பு, செயல்திறன் மதிப்பீடு மற்றும் பின்தொடர்தல் நடவடிக்கைகள் தொடர்பான அனைத்து தேவையான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

## நோக்கு

"பிரஜைகளின் அடையாளத்தை உறுதிப்படுத்தும் பாதுகாப்பான, அமைதியான மற்றும் போதைப்பொருளற்ற இலங்கையை உருவாக்குதல்"

## பணிக்கூற்று

"குற்றம், பயங்கரவாதம், போதைப்பொருள் ஆகியவற்றின் அச்சுறுத்தலை ஒழித்து சட்டம் மற்றும் சமாதானத்தை நிலைநிறுத்தி சட்டபூர்வமான குடிமக்களின் அடையாளத்தை உறுதிப்படுத்தும் நாட்டை உருவாக்குவதற்கான கொள்கைகள் மற்றும் உத்திகளை வகுத்து செயல்படுத்துதல்"

## குறிக்கோள்

பேண்தகு அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைவதற்கான பேரார்வத்துடன் அரசின் கொள்கைகளுக்கு அமைவாக பொதுமக்கள் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக பொருத்தமான விஷேடமான முன்னுரிமை கருமங்களை நிறைவேற்றி பொதுமக்கள் நேயமான சேவையை வழங்குதல்.

## நோக்கங்கள்

- நாட்டு மக்கள் அனைவரும் சுதந்திரமாக வாழ்வதற்கு பொருத்தமான சூழலை உருவாக்குவதற்காக பொதுமக்கள் பாதுகாப்பை உறுதி செய்வதற்குத் தேவையான கொள்கைகளை வகுத்தல் மற்றும் வழிகாட்டுதல்.

- பொலீஸ் சேவையின் வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்காக நவீன தகவல் தொழில்நுட்ப கருவிகள் மற்றும் பயிற்சி வழங்குவதன் மூலம் பொலீஸ் அலுவலர்களின் தொழில்வாண்மையை மேம்படுத்துதல்.

- மக்களின் வாழ்க்கையைப் பாதுகாப்பாகப் பேணக்கூடிய வகையில் தீவிரவாதம், பயங்கரவாத செயற்பாடுகள், கொள்ளை, ஆட்கொலை, பாதாள உலக செயற்பாடுகள், போதைப்பொருள் தொல்லையை அழிக்கக்கூடிய வகையில் ஸ்ரீ லங்கா பொலீஸின் புலனாய்வுப் பிரிவு மற்றும் செயற்பாட்டுப் பிரிவைப் பலப்படுத்திப் பேணுதல்.

- ஸ்ரீ லங்கா பொலீஸின் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்குப் பொருத்தமான திட்டத்தைத் தயாரித்து அந்த செயன்முறை தொடர்பான மேற்பார்வை மற்றும் தொடராய்வு செயன்முறையைப் பலமாகப் பேணுதல்.

- வாகன விபத்துக்கள், அங்கவீனமடைதல் மற்றும் மரணங்களைக் குறைப்பதற்காக வாகன ஒழுங்குபடுத்தலைக் கட்டுப்படுத்துதல் மற்றும் ஒழுங்குபடுத்துவதற்கு நவீன தொழில்நுட்ப செயலிகள் மற்றும் பாவனையை அறிமுகம் செய்தல்.

- சர்வதேச தரத்தில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தனிப்பட்ட அடையாளத்தை உறுதிப்படுத்தும் பின்னணியை அமைத்தல்.

- போதைப்பொருள் அச்சுறுத்தல் மற்றும் ஆபத்தான போதைப்பொருள் துஷ்பிரயோகத்தை எதிர்த்துப் போராடுவதற்கு பொருத்தமான மூலோபாய திட்டங்களை செயல்படுத்துதல்.

- இலங்கையில் இயங்கும் அனைத்து அரச சார்பற்ற அமைப்புகளையும் பதிவு செய்தல் மற்றும் அரச கொள்கைகளுக்கு அமைவாக அவை செயற்படுதலை உறுதி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

## விஷேட முன்னுரிமைகள்

- பொதுமக்கள் பாதுகாப்பை உறுதி செய்தலை இலக்காகக் கொண்டு, ஸ்ரீ லங்கா பொலீஸ் சேவையின் சேவை மட்டத்தை மேம்படுத்துதல்.
- போதைப்பொருள் தொல்லையிலிருந்து சமூகத்தை விடுவிக்கும் செயற்திட்டத்தை சமூக மட்டத்திலும், பாடசாலை மற்றும் கல்வி நிறுவனங்களில் பிள்ளைகள் அரச மற்றும் தனியார் சேவை நிலையங்களை இலக்காகக் கொண்ட செயற்திட்டங்கள், சமய மையங்கள், சமூக அமைப்புகள், அரச மற்றும் தனியார் துறையுடன் அமுல்படுத்துதல்.
- உள்ளக பாதுகாப்பை உறுதி செய்வதனை இலக்காகக் கொண்டு தீவிரவாத மற்றும் பயங்கரவாத செயற்பாடுகளைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- மக்களின் வாழ்க்கையைப் பாதுகாப்பாகப் பேணுவதற்காகக் கொள்ளை, ஆட்கொலை, சமூக விரோத செயற்பாடுகள் மற்றும் குற்றங்களைத் தடுத்தல், ஒடுக்குதல்.
- நாட்டிலுள்ள அனைத்து பிரஜைகளும், விஷேடமாக பெண்கள் மற்றும் சிறுவர்கள் சுதந்திரமாக தமது வாழ்க்கையை முன்னெடுப்பதற்குத் தேவையான பாதுகாப்பை எப்போதும் பேணுதல்.
- வாகன பாவனையின் போது வீதிகளில் இடம்பெறும் முறைகேடுகள் மற்றும் வீதி விபத்துக்கள் காரணமாக இடம்பெறும் மரணங்கள், அங்கவீனமடைதல், மருத்துவமனையில் அனுமதிக்கப்படுதல் போன்றவற்றைத் தடுத்தல் மற்றும் முறையற்ற மற்றும் கவனமற்ற வாகன செலுத்துகை, ஒழுங்கை மற்றும் வீதி சமிக்ஞைகளை மீறுதல், விஷேடமாக மாநகர பிரதேசங்களில் முறையற்ற வாகன செலுத்துகை மற்றும் வீதியின் இரு மருங்கிலும் வாகனங்களை நிறுத்தி வைப்பதன் காரணமாக ஏற்படும் வீதி நெருக்கடிகளைக் குறைத்து, முறையான வாகன செலுத்துகையை முறைமைப்படுத்தும் வழிமுறை மற்றும் சட்ட ரீதியான வரையறையை அமுல்படுத்துவதற்காகப் போக்குவரத்துப் பொலீஸ் மறுசீரமைக்கப்பட்டு நவீன தொழில்நுட்ப மற்றும் தந்திரோபாயங்களைப் பாவித்து நவீனமயப்படுத்துதல்.
- தேசிய கொள்கை சட்டகத்தினுள் அரச சார்பற்ற அமைப்புகளின் கருமங்களை ஒருங்கிணைத்து நாட்டின் அபிவிருத்தி செயன்முறைகளில் பங்களிப்பு செய்ய வாய்ப்பளித்தல்.
- குடிவரவு மற்றும் குடியகல்வு நிர்வாகத்தை நவீன மற்றும் திறமையான சேவையாக பராமரித்தல்.
- தனிப்பட்ட அடையாளத்தின் உள்ளூர் உறுதிப்படுத்தலை மேற்கொள்ள உறுதிசெய்தல் பின்னணியை உருவாக்கல், நவீன மற்றும் திறமையான சேவையை பராமரித்தல்.
- போதைப்பொருள் அச்சுறுத்தல் மற்றும் ஆபத்தான போதைப்பொருள் துஷ்பிரயோகத்தை எதிர்த்துப் போராடுவதற்கு பொருத்தமான மூலோபாய திட்டங்களை செயல்படுத்துதல்.

## 1.2. அமைச்சு செயற்பாடுகளின் முன்னேற்றம்

- **மனித வள அபிவிருத்தி...**

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் விடயப்பரப்பின் விரிவாக்கத்துடன் 476 பேரை கொண்ட ஆளணி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டது. இதன்படி 382 அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன், அதில் 342 அபிவிருத்தி உத்தியோகத்தர்களை அபாயகரமான ஔடதக் கட்டுப்பாட்டுத் தேசிய சபைக்கு நியமிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன்படி அமைச்சின் மொத்த ஆளணியினர் 134 ஆவதுடன் மொத்த பணியாளர் தேவையில் 95% 2024 ஆம் ஆண்டு இறுதியில் பூர்த்தி செய்ய சந்தர்ப்பம் கிட்டியுள்ளதுடன் அமைச்சின் பொறுப்புகள் அதிகபட்ச வினைத்திறனுடன் பேணப்பட்டு வருகிறது. அத்துடன் சம்பளமற்ற உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விடுமுறை கோரிக்கைகளுக்கமைய சிவில் உத்தியோகத்தர்கள் இருவருக்கு உள்நாட்டு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

- **பாடநெறிகளுக்கான இணைப்புகள்...**

அமைச்சின் ஒட்டுமொத்த தொலைநோக்குப் பார்வையை அடைய ஊழியர்களுக்குத் தேவையான அறிவு. மனப்பான்மைகளையும் திறன்களையும் வளர்ப்பதற்கு பயிற்சி அளிப்பது அவசியம். அதன்படி, அறிவு, மனப்பான்மை, திறன்கள் மற்றும் நேர்மறையான சிந்தனையை வளர்ப்பதற்கான பல்வேறு பயிற்சித் திட்டங்களில் அமைச்சின் உத்தியோகத்தர்கள் இணைத்து கொள்ளப்பட்டனர். அமைச்சின் அதிகாரிகளின் திறன் மேம்பாட்டிற்காக உள்ளூர் பயிற்சி வழங்கும் நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து அலுவலக நடைமுறைகள், அமைச்சரவை குறிப்பாணைகள் தயாரித்தல், கணக்காய்வு முறைகள், தனியாள் கோப்புகளைப் பராமரித்தல் மற்றும் கணக்கியல் அமைப்புகள் ஆகிய பாடங்களை உள்ளடக்கிய பயிற்சி பதவி நிலை உத்தியோகத்தர்கள் உட்பட அனைத்து அதிகாரிகளுக்கும் ரூ. 668,000.00 செலவில் பயிற்சி வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. தமிழ் மொழிப் புலமைப் பயிற்சி தேவைப்படும் அதிகாரிகளுக்குப் பயிற்சி வாய்ப்புகளை வழங்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- **வெளிநாட்டுப் பயிற்சி**

2024 டிசம்பர் 31 அமைச்சின் 03 பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கு வெளிநாட்டு பயிற்சி மற்றும் வெளிநாட்டு மாநாடுகளில் பங்கேற்றுள்ளனர்.

- **விசேடமான பணிகளின் முறையான ஆரம்பத்திற்காக...**

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களில் இடம்பெறும் கருமங்களை முறையாகவும், வெளிப்படைத் தன்மையாகவும் சட்ட வரையறைக்குள் மேற்கொள்வதற்காக மனித வள விருத்தி, நலன்புரி செயற்பாடுகளை மேம்படுத்துதல், உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி போன்ற பல்வேறு கருமங்களை அடிப்படையாகக் கொண்டு 2024 வருடத்தில் 45 அமைச்சரவைப் பத்திரங்கள் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டன. அந்த பத்திரங்களுக்கு அமைச்சரவை அங்கீகாரம் மற்றும் விதந்துரைகளுக்கு அமைய அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் கருமங்களை முறையாக மேற்கொள்வதற்கு தேவையான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- **போதைப்பொருள் பாவித்த சாரதிகளை அடையாளம் காண்பதற்கான பரிசோதனைத் கட்டளைகளை ஸ்ரீ லங்கா பொலிஸிற்கு வழங்கி ...**

போதைப்பொருள் பாவனையில் வாகனம் செலுத்தும் சாரதிகளை பரிசோதிப்பது குறித்த ஒரு முன்னோடி திட்ட அறிக்கையை அபாயகரமான ஔடத கட்டுப்பாட்டுச் சபை தயாரித்துள்ளது. இருப்பினும், முன்னோடித் திட்டத்தில் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களுக்கு இன்னும் சட்டப்பூர்வ அந்தஸ்து வழங்கப்படாததால், உபகரணங்களை மீண்டும் வாங்குவது நடைமுறைக்கு சாத்தியமில்லை என்றும் உபகரணங்களுக்கு சட்டப்பூர்வ அந்தஸ்து பெற்ற பிறகு இந்தத் திட்டத்தை மீண்டும் தொடங்குவது பொருத்தமானது என்று 2024.08.14 தேசிய வீதி பாதுகாப்பு சபை கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

- **சிறுவர் துஸ்பிரயோகம் மற்றும் வற்புறுத்தலை ஒழிக்கும் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தி...**

அமைச்சின் நெறிப்படுத்தலின் கீழ் சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சு, நீதி அமைச்சு, ஸ்ரீ லங்கா பொலீஸ், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் மற்றும் தொடர்புடைய ஏனைய பிரிவுகளையும் இணைத்து சிறுவர் துஸ்பிரயோகங்களைத் தடுப்பதற்கான தீர்மானங்களை மேற்கொண்டு அவை தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதன்படி மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சினால் தயாரிக்கப்பட்ட மகளீர் சமாதானம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபைக்கு முன்மொழிய இலங்கையின் தேசிய செயற்பாட்டு திட்டம் 2023-2027 செயற்பாட்டு இல 1.6 இன் தேவைபாட்டினை பூர்த்தி செய்யும் நோக்கில் சிறுவர் துஸ்பிரயோகம் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறையில் தவறான விசாரணை மற்றும் வழக்கு தொடரல் தொடர்பில் இலங்கை காவல்துறையின் சிறுவர் மற்றும் பெண்கள் துஸ்பிரயோகம் தடுப்பு மற்றும் புலனாய்வுப் பணியகத்திற்கான நிலையான செயல்பாட்டு நடைமுறையைத் தயாரித்தல் (Japanese government agency - Sri Lanka Office) ஜய்கா ஸ்ரீ லங்கா நிறுவனத்தின் ஒத்தாசையுடன் ஆரம்பிக்கப்பட்டது. இதற்காக செயற்பாட்டு குழுவொன்று நிறுவப்பட்டதுடன் குறித்த குழு உறுப்பினர்களின் பங்கேற்புடன் முதலாவது செயலமர்வு 2024.07.19 திகதியும் இரண்டாவது செயலமர்வு 2024.09.06 திகதியும் மேற்கொள்ளப்பட்டு நிலையான செயற்பாட்டு நடைமுறைகளை வரைவதற்கான பணிகள் தொடங்கப்பட்டன.

- **காவல் நிலையங்களில் நிறுவப்பட்டுள்ள சிறுவர் மற்றும் மகளிர் பணியகங்களின் பௌதீக வசதிகள் மற்றும் பொது வசதிகளை மேம்படுத்துதல**

ஐக்கிய நாடுகளின் மக்கள்தொகை நிதியத்தின் ஆதரவுடன் சிறுவர் மற்றும் மகளீர் பணியகம் வன்முறையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மற்றும் பெண்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பாதிக்கப்பட்டவர்களின் கண்ணியத்தையும் தனியுரிமையையும் பாதுகாக்கும் வகையில் சுயாதீனமான அணுகலுடன் அலுவலக வசதிகளை மேம்படுத்தும் திட்டத்தைத் தொடங்கியது. ஆரம்ப கட்டமாக கொழும்பு, கண்டி, நுவரெலியா, புத்தளம், முல்லைத்தீவு, மட்டக்களப்பு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட 07 காவல் நிலையங்களில் பணிகள் நிறைவுசெய்யப்பட்டு சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் கட்டத்தில் மேலும் ஏழு மாவட்டங்களை உள்ளடக்கிய வகையில் சிறுவர் மற்றும் மகளிர் பணியகங்களுக்கான பௌதீக வசதிகளை மேம்படுத்துவதற்கும் எதிர்காலத்தில் அந்தப் பணியகங்களுடன் இணைக்கப்பட்டுள்ள காவல்துறை அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிப்பதற்கும் பொருத்தமான இடங்களை அடையாளம் காணவும் திட்டமிடப்பட்டுள்ளது.

- **பிரதி பொலிஸ் மாஅதிபர் பிரிவுகளின் எல்லை நிர்ணயம் செய்தல்...**

பிரதி பொலிஸ் மாஅதிபர் பிரிவுகளின் எல்லை நிர்ணயம் தொடர்பாக நிர்வாக மாவட்ட எல்லைகள் மற்றும் மாகாண எல்லைகள் பொலிஸ் பிரிவு எல்லைகளுடன் ஒத்துப்போகாதவைகளை அடையாளம் காணல் அந்த எல்லை நிர்ணய சிக்கல்களுக்கான தீர்வுகளை முன்மொழிதல், காரணங்கள் மற்றும் நடைமுறை சூழ்நிலைகளை வலியுறுத்தி இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டு ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அந்த முன்மொழிவுகளை செயல்படுத்துவதற்கான ஒப்புதல் பெறப்பட்டதால் அந்த முன்மொழிவுகளை செயல்படுத்துவதற்கான செயல் திட்டம் தயாரிக்கப்பட்டு அதன்படி மாகாண மட்டத்தில் எல்லை நிர்ணய முன்மொழிவுகள் மாகாண ரீதியில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

- **புதிய காவல் நிலையங்கள் மற்றும் காவல் அரண்களை நிறுவுதல்.**

பிரதிப் பொலிஸ் மா அதிபரின் பிரதேச எல்லை நிர்ணய அறிக்கையில் உள்ள முன்மொழிவுகளையும் மக்களின் வசதியையும் கருத்தில் கொண்டு பொலிஸ் பிரிவுகளில் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்த்து புதிய பொலிஸ் நிலையங்கள் மற்றும் காவல் நிலையங்களை நிறுவுவதற்குத் தேவையான அனுமதி பொலிஸ் மா அதிபரின் பரிந்துரைகளின்படி மேற்கொள்ளப்படுகின்றது.

- **குறித்த இடத்திலேயே உடனடி தண்டப்பணத்தை அறவிடுதல் மற்றும் சாரதியின் தவறான நடத்தை அடையாளமிடும் செயற்றிட்டம் …..**

சாரதிகளுக்கு ஒழுக்கத்தை ஏற்படுத்துவதற்காக சாரதிகளுக்கு பாதகமான புள்ளி வழங்கும் முறை மற்றும் போக்குவரத்து வீதி சட்டங்களை மீறும் சந்தர்ப்பத்தில் நீதிமன்றத்தில் முன்நிலைப்படுத்தப்படாத தவறுகளுக்கு உடனடியாக தண்டப் பணத்தை அறவிடும் விரிவான ஒருங்கிணைந்த இலத்திரனியல் தீர்வை அமுல்படுத்துவதற்காக ஸ்ரீ லங்கா பொலீஸ், மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம், இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவரகம் மற்றும் தொடர்புடைய அனைத்து நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து 03 கட்டங்களின் கீழ் அரசாங்க அங்கீகாரம் பெற்ற கொள்முதல் செயல்முறையின் மூலம் திட்டத்தை செயல்படுத்துவதற்கு அமைச்சரவையின் ஒப்புதல் அமைச்சரவை தீரமான இலக்கம் අමප /23/0472/626/004-I மற்றும் 2023.04.18 திகதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, அங்கீகரிக்கப்பட்ட கொள்முதல் செயல்முறையின் மூலம் திட்டத்தை செயல்படுத்த பொருத்தமான நிறுவனத்தைத் தேர்ந்தெடுப்பது பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் பங்களிப்போடு போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் மேற்கொள்ளப்படுகிறது. இதுவரை இந்த முறையை செயல்படுத்துவதற்காக தபால் திணைக்களத்தினால் வழங்கப்படும் பொது 172 பற்றுச்சீட்டுக்கு பதிலாக அஞ்சல் திணைக்களத்தினால் வழங்கவுள்ள E-Counter 01 படிவத்தை வழங்குவது தொடர்பாக அரச நிதி திணைக்களத்தின் ஒப்புதல் பெறப்பட்டு அந்தப் படிவத்தின்படி பணம் செலுத்துவதற்கான பற்றுச்சீட்டு வழங்குவதற்காக போக்குவரத்து அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

- **போதைப்பொருட்களை அழிப்பதற்கான Incinerator இயந்திரமொன்றை நிறுவுதல்…**

நீதிமன்ற உத்தரவுகளால் கைப்பற்றி அழிக்க உத்தரவிடப்பட்ட போதைப்பொருட்கள் தேசிய அச்சுறுத்தலை ஏற்படுத்துவதால் அவற்றை அழிப்பதை செயல்படுத்துவதில் இது ஒரு முக்கியமான படியாகக் கருதி இந்த விடயத்தில் அமைச்சு தலையிடுகிறது. இந்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படும் எரியூட்டியை (Incinerator) நிறுவுவதற்கு வனாதவில்லு லெக்டொவத்த இடம் தேர்ந்தெடுக்கப்பட்டது இலங்கை காவல்துறை, இலங்கை கடற்படை மற்றும் விசேட அதிரடிப் படையின் ஒத்துழைப்புடன் குறித்த கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு எரியூட்டி (Incinerator) நிறுவப்பட்டது. முதலாவது எரியூட்டல் சோதனை 2024.05.09 நடத்தப்பட்டதுடன் அதன் பிறகு பறிமுதல் செய்யப்படும் போதைப்பொருட்கள் எரிக்கப்படுகின்றன.

- **பணியின் போது இறந்த காவல்துறை அதிகாரிகளின் குடும்பத்தினருக்கும் ஊனமுற்ற ஓய்வூதியதாரர்களுக்கும் நிவாரணம் வழங்குதல்…**

சட்டம் மற்றும் ஒழுங்கைப் பேணும் நோக்கில் கடமைகளைச் செய்யும்போது இறந்த அல்லது அங்கவீனமடைந்த இலங்கை காவல்துறை மற்றும் விசேட அதிரடிப் படை அதிகாரிகளுக்கான சிறப்பு ஏற்பாடுகளை செயல்படுத்த எடுக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்திற்கமைய 2024 ஆம் ஆண்டில் 35 அதிகாரிகளுக்கு இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

### 1.2.1. பொதுமக்களின் குறைகளை விரைவாக தீர்த்துவைப்பதற்காக...

- அமைச்சில் பொதுமக்களின் புகார்களைத் தீர்த்தல்

அமைச்சின் ஒருங்கிணைப்புப் பிரிவின் கீழ் பராமரிக்கப்படும் பொதுமக்கள் புகார்கள் பிரிவினால் 118 தேசிய சேவை மையத்திற்கு காவல்துறை அதிகாரிகளுக்கு எதிராக பொதுமக்கள் அளிக்கும் புகார்கள், காவல்துறை அதிகாரிகளின் தவறான நடத்தை தொடர்பாக மற்றும் காவல் நிலையத்திற்கு அளிக்கப்படும் ஆய்வு செய்யப்படாத புகார்கள் மாகாண மாகாண சிரேஸ்ட பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பபட்டு விரைவான விசாரணைகள் மற்றும் முன்னேற்றம் தொடர்பில் தகவல்கள் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

மேலும் அமைச்சின் கீழ் இயங்கும் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம், ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம், ஆபாயகரமான ஔடத கட்டுப்பாட்டு சபை, அரச சார்பற்ற அமைப்புகள் தொடர்பான தேசிய செயலகம் ஆகியவற்றிற்கு எதிரான புகார்களும் பெறப்பட்டு விசாரணைக்காக சம்பந்தப்பட்ட பிரிவுக்கு அனுப்பப்படுகின்றன. இதன் கீழ் மதிப்பாய்வு காலகட்டத்தில் 7731 புகார்கள் பெறப்பட்டு அவை அனைத்திற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள் நடைமுறைப்படுத்த தாமதமான அல்லது செயல்படுத்தப்படாத விடயங்கள் தொடர்பாக சலுகை பெறவும், அரசு நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகள் மீது புகார்கள் மற்றும் குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்யவும் பொதுமக்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதன் கீழ் 2024 ஆம் ஆண்டில் பாதாள உலக நடவடிக்கைகள் மற்றும் போதைப்பொருள் நடவடிக்கைகள் தொடர்பாக சமூகத்தை பாதிக்கும் 55 புகார்கள் பெறப்பட்டன. மேலும், ஜனாதிபதி செயலகம், பிரதமர் அலுவலகம் மற்றும் பிற அரசு நிறுவனங்களால் காவல்துறை தொடர்பாக 920 புகார்களும், காவல்துறை அதிகாரிகள் மற்றும் அரசு அதிகாரிகளுக்கு எதிராக பொதுமக்களால் 123 புகார்களும், மேலும் 38 புகார்களும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மதிப்பாய்வு செய்யப்பட்ட காலகட்டத்தில் தாக்கல் செய்யப்பட்ட 1136 மேல்முறையீடுகள் மற்றும் புகார்களில் 962 பரிசீலிக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன, அதே நேரத்தில் நடந்து கொண்டிருக்கும் மேல்முறையீடுகளின் எண்ணிக்கை 142 ஆகும். மேலும் சமர்ப்பிக்கப்பட்ட புகார்களில் 32 புகார்கள் காவல்துறையின் எல்லைக்குள் வராததால் அவை பிற தொடர்புடைய நிறுவனங்களுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

- **118 அவசர அழைப்பு சேவை**

118 தேசிய சேவை மையத்தின் முதன்மை நோக்கம் தேசிய பாதுகாப்பு தொடர்பான தகவல்களை பொதுமக்களிடமிருந்து உடனடியாக அமைச்சிற்கு பெறுவதாகும். இது தவிர முப்படைகள், காவல்துறை மற்றும் அமைச்சின் கீழ் உள்ள அனைத்து அரசு நிறுவனங்களுக்கும் எதிரான குற்றச்சாட்டுகள் மற்றும் கருத்துகளைப் புகாரளிக்கும் மையமாகவும் செயல்படுகிறது. 118 தேசிய சேவை மையம் 2023.10.13 திகதி முதல் புதிய தொழில்நுட்பத்தை இணைத்து 24 மணி நேரமும் செயற்படும் Online Emergency & amp; Public Complain Management System பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சு செயலாளரின் நேரடி மேற்பார்வையின் கீழ் அமைச்சின் வளாகத்திற்குள் செயற்பட்டு வருகிறது. 2024 ஆம் ஆண்டில் இந்த சேவைக்கு 105,825 புகார்களைப் பெறப்பட்டுள்ளதுடன் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

### 1.2.2 அபிவிருத்தி திட்டங்களைக் கண்காணித்தல்...

பொதுப் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களுக்கான வருடாந்த மூலதன ஒதுக்கீடுகள் தொடர்பாக செயற்படுத்தப்படும் அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்றத்தை காலாண்டு ரீதியாக மதிப்பாய்வு செய்ய கூட்டங்கள் நடத்தப்பட்டன. குறிப்பாக கட்டுமானம் மற்றும் கொள்முதல் திட்டங்களில்

சிக்கல்கள் எழுந்தபோது சம்பந்தப்பட்ட தரப்பினர் வரவழைக்கப்பட்டு அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க தேவையான ஆலோசனைகளும் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. ஒப்பந்ததாரர்களின் திறமையின்மையால் தடைபட்ட திட்டங்களுக்கு கள கண்காணிப்பு நடவடிக்கை நடத்தி தேவையான திருத்தங்களைச் செய்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.

- **அமைச்சின் உள்ளக கணக்காய்வு திட்டத்தை செயல்படுத்துதல்....**
  - வருடாந்த செயற்திட்டம் மற்றும் கொள்முதல் திட்டம் மற்றும் தொடர்புடைய சுற்றறிக்கைகளுக்கு இணங்க நிதி மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் போன்றவற்றின் முன்னேற்றம் உட்பட அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் அமுலாக்கம் மற்றும் கண்காணிப்பதற்கு தேவையான கணக்காய்வு நடவடிக்கைகளை உள்ளக கணக்காய்வு பிரிவு எடுத்துள்ளது. தயாரிக்கப்பட்ட கணக்காய்வு திட்டத்தின்படி அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. இதன்படி 2024 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வு திட்டத்தில் 75% ஐ நிறைவு செய்ய முடிந்தது.
  - நிறுவன உள்ளக கணக்காய்வு செயற்பாட்டை வலுப்படுத்த அமைச்சின் உள்ளக கணக்காய்வு பிரிவின் மூலம் முற்பண பி கணக்கு, பொது வைப்பு கணக்கு, சொத்து முகாமைத்துவம், பண்டகசாலை ஆய்வு, வரடாந்த பொருட்கள் கணக்கெடுப்பு, சரக்கு அகற்றல், சரக்கு கட்டுப்பாடு, வருடாந்த செயல் திட்டம், திட்ட முன்னேற்ற ஆய்வு, தனிப்பட்ட கோப்பு பராமரிப்பு, விடுமுறை மற்றும் வாகன பராமரிப்பு, அமைச்சின் இணையதளம் ஆகிய துறைகளில் குறித்த காலத்தில் கணக்காய்வு நடத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவிற்கும் கணக்காய்வு வினவல்கள் வெளியிடப்பட்டுள்ளது.
  - மேலும் மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியில் விசேட அதிரடிப்படையின் கொடுப்பனவு வவுச்சர்களின் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளன. அபாயகரமான ஔடத கட்டுப்பாட்டுக்கான தேசிய சபையின் கீழ் தலைமையக கணக்காய்வு மற்றும் காலி புனர்வாழ்வு நிலையத்தின் பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அரச சார்பற்ற அமைப்புகள் தொடர்பான தேசிய செயலகத்தின் அரச சார்பற்ற நிறுவன பதிவு தொடர்பாகவும், நிதி மற்றும் பிற துறைகளில் முறைகேடுகள், ஆண்டுத் திட்டங்கள், முன்னேற்ற மதிப்பாய்வு மற்றும் நுண்நிதி கடன்கள் தொடர்பான கணக்காய்வு வினவல் அனுப்பப்பட்டுள்ளது. ஆட்கள் பதிவுத் திணைக்களம் தொடர்பான இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை திட்டம் தொடர்பாகவும் ஒரு கணக்காய்வு வினவல் அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2.3 பரஸ்பர ஒத்துழைப்பை பெற்று…

தற்போது பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் கௌரவ அமைச்சர் அப்பதவியை ஏற்ற பின்னர் முதலாவதாக அது தொடர்பான காத்திரமான பொறுப்பு மற்றும் பணியை நிறைவேற்றுவதற்காக பல்வேறு தரப்பினரின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வதற்காக கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றில் வெளிநாட்டு பிரதிநிதிகள் மற்றும் பரஸ்பர ஒருங்கிணைப்புக்கு தேவையான அமைச்சுக்களின் அமைச்சர்களுடனும் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்டது.

- **வெளிநாடுகளுடனான இருதரப்பு ஒப்பந்தங்கள்...**

சட்ட அமுலாக்கம், பயிற்சி வகுப்புகள், தகவல் வசதிகளைப் பரிமாறிக்கொள்வது, தொழில்நுட்ப கருவிகள் மற்றும் ஆலோசனைகளைப் பெறுதல் மற்றும் வெளிநாடுகளில் சட்டவிரோதமாகத் தங்கியுள்ள குடிமக்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்புதல் போன்ற செயல்முறைகளுக்காக இலங்கை அரசாங்கத்திற்கும் வெளிநாடுகளுக்கும் இடையே இந்த அமைச்சு புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் செய்கிறது. அந்த ஒப்பந்தங்களில் இராஜதந்திர பயணச்சீட்டுகளை கொண்ட அதிகாரிகளுக்கு பல நாடுகளுக்கு விசா

இல்லாத பயண வசதிகளும் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி இந்த ஆண்டு ருவாண்டா குடியரசு மற்றும் லாவோஸ் போன்ற நாடுகளுடன் இருதரப்பு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

- **மனித கடத்தல் தொடர்பான...**

மனித கடத்தலை ஒழிப்பதற்கான உள்ளூர் செயலணியில் முக்கிய பங்குதாரராக அமைச்சு செயற்படுவதுடன் ஸ்ரீ லங்கா பொலிஸ் HTMCID மனித கடத்தல் கடல்சார் குற்ற விசாரணைப் பிரிவிற்கு தேவையான ஆதரவை வழங்குவதன் மூலம் மனித கடத்தலை தடுப்பதற்கு செயற்பட்டு வருகின்றது. சிறுவர் கடத்தலை எதிர்த்துப் போராடுவதற்கான ஒரு நிலையான செயற்பாட்டு நடைமுறையும் வெளியிடப்பட்டுள்ளது.

## 1.3. நிதி முன்னேற்றம்

2024 ஆம் ஆண்டுக்காக அமைச்சிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் அளவு மற்றும் வருடத்தில் அமைச்சின் கருமங்களுக்காக கிடைத்த நிதி ஒதுக்கீடுகளிலிருந்து மேற்கொள்ளப்பட்ட செலவுகளின் சராம்சம்.

**அமைச்சின் நிதி முன்னேற்றம்**

புள்ளிவிபர அட்டவணை **- 01**

| நிறுவனம் | 2024 நிதி ஒதுக்கீடு (ரூ) | | 2024.12.31 வரை செலவு (ரூ) | | செலவு வீதம் (%) | |
|---|---|---|---|---|---|---|
| | மீண்டெழும் | மூலதன | மீண்டெழும் | மூலதன | மீண்டெழும் | மூலதன |
| பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு செயற்றிட்டம் 01 | 45,590,800 | 4,358,500 | 40,337,142.44 | 3,783,828.65 | 88.48% | 86.81% |
| பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு செயற்றிட்டம் 02 | 437,129,200 | 23,905,500 | 427,287,224.38 | 23,086,070 | 98% | 97% |

## 1.4. அமைச்சின் இடைக்கால இலக்கு 2025 - 2027

- பொலிஸ் உத்தியோகத்தர் பதவி உயர்வுகள், இடமாற்றங்கள் மற்றும் ஒழுக்காற்றுப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் தேவையான மனித வளங்களை வழங்குவதற்கும் வசதி செய்தல்.
- வீதி விபத்துக்களை குறைப்பதற்கு புதிய தொழில்நுட்பத்துடன் இலங்கை காவல்துறையின் போக்குவரத்து பிரிவை வலுப்படுத்த நடவடிக்கை எடுத்தல்.
- குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திற்கு கடவுச்சீட்டுகளைச் செயலாக்குவதற்கும், சர்வதேச தரத்தில் விசாக்கள் மற்றும் இரட்டைக் குடியுரிமைகளை வழங்குவதற்கும் அதிகாரமளித்தல்.
- போதைப்பொருள் அச்சுறுத்தல் மற்றும் ஆபத்தான மருந்துகளின் துஷ்பிரயோகத்தை எதிர்த்துப் போராடுவதற்கு அபாயகரமான ஔடத தேசிய கட்டுப்பாட்டு சபைக்கு அதிகாரமளித்தல்.
- அரச சார்பற்ற நிறுவனங்களின் தேசிய செயலகத்தை ஒரு வலுவான நிறுவனமாக உருவாக்கி அதன் மூலம் தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு பங்களித்தல்.

## 02. அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்கள்

i. ஸ்ரீ லங்கா பொலீஸ்
ii. விசேட அதிரடிப்படை
iii. குடிவரவு, குடியகல்வு திணைக்களம்
iv. ஆட்களை பதிவுசெய்யும் திணைக்களம்
v. அரச சார்பற்ற அமைப்புகள் தொடர்பான தேசிய செயலகம்
vi. ஆபாயகரமான ஔடத கட்டுப்பாட்டு சபை

## 2.1. ஸ்ரீ லங்கா பொலீஸ்

### 2.1.1. அறிமுகம்

1865 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பொலீஸ் கட்டளைச் சட்டத்துக்கு அமைய பிரித்தானியர்களின் ஆட்சிக் காலத்தில் திட்டமிடப்பட்ட சேவைகளை பொது மக்களுக்கு வழங்குவதற்காக 1866 செப்டெம்பர் மாதம் 03 ஆம் திகதி பொலீஸ் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டது. அன்றிலிருந்து தற்போது வரை 158 ஆண்டுகளுக்கு அதிகமான காலம் ஸ்ரீ லங்கா பொலீஸ் "நாட்டின் சட்டம் மற்றும் சமாதானம்" பாதுகாத்து பேணுவதற்காக காத்திரமான பொறுப்பை நிறைவேற்றி வருகிறது.

மக்கள் வாழ்க்கையின் அனைத்து துறைகளுக்கும் பாதுகாப்பை உறுதிசெய்து, சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முதன்மையான பொறுப்பு ஸ்ரீ லங்கா பொலீஸிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சமூக சமாதானம் மற்றும் நல்லிருப்பை அடிப்படையாகக் கொண்ட குற்றத் தடுப்பு மற்றும் ஒடுக்குதல், போதைப்பொருள் தொல்லையை ஒடுக்குதல், ஊழல் ஒழிப்பு, வாகனக் கட்டுப்படுத்தல், சுற்றாடல் பாதுகாப்பு, அனர்த்த வேளைகளில் மக்களுக்கு நிவாரணம் வழங்குதல் மற்றும் பிரமுகர்கள் பாதுகாப்பு ஆகிய பிரதான பணிப்பொறுப்புகள் பொலீஸின் விடயப்பரப்புக்கு உரியவையாகும்.

மேற்குறித்த பணிப் பொறுப்புகளை நாடு முழுவதும் அமுல்படுத்தவதற்காக நாளின் 24 மணித்தியாலமும் கடமையில் ஈடுபடும் மேற்பார்வை தரம், பரிசோதகர் தரம் மற்றும் கனிஸ்ட தரம் ஆகிய தரங்களைக் கொண்ட 90,000 பேருக்கு கூடுதலான பொலிஸ் அலுவலர்கள் சேவையில் ஈடுபடுகின்றனர். இந்த அலுவலர்கள் சாதாரண சேவை, உதவிச் சேவை மற்றும் விஷேட அதிரடிப்படை என்ற வகையில் விஷேட கருமங்கள் நிறைவேற்றப்படுகின்றன. அதற்கு மேலதிகமாக 4000 இற்கு மேற்பட்ட சிவில் அலுவலர்களும், ஸ்ரீ லங்கா பொலீஸின் கருமங்களுக்காக உதவி வழங்கி கடமை மேற்கொள்கின்றனர்.

158 ஆண்டு கால வரலாற்று முக்கியத்துவமான பணியில் ஈடுபட்டுள்ள ஸ்ரீ லங்கா பொலீஸ் தற்போது மிகவும் பரந்த பணிப்பொறுப்பை நிறைவேற்றுவதற்காக பொது மக்களுடன் மிகவும் நெருக்கமாக, நாடு முழுவதும் 607 க்கு அதிகளவான பொலீஸ் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதற்கு மேலதிகமாக 45 பிராந்திய பிரிவுகள் மற்றும் 74 செயற்பாட்டு பிரிவுகளை கொண்ட கட்டமைக்கப்பட்ட நிறுவன கட்டமைப்பின் மூலம் ஸ்ரீ லங்கா பொலீஸ் சேவை நிறைவேற்றப்படுகிறது.

## 2.1.2. ஸ்ரீ லங்கா பொலிஸின் செயற்பாடுகளின் முன்னேற்றம்

“நாட்டின் சட்டம் மற்றும் சமாதானம்” பாதுகாத்து பராமரித்துக் கொண்டு சமூக அமைதிக்கு அடிப்படையான நாட்டின் குற்றத்தடுப்பு மற்றும் ஒடுக்குமுறை, போதைப்பொருள் அச்சுறுத்தல், ஊழல் எதிர்ப்பு, போக்குவரத்து கட்டுப்பாடு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, அனர்த்த சுழ்நிலை மற்றும் பிரமுகர்கள் பாதுகாப்பு ஆகியவை ஸ்ரீ லங்கா பொலீஸின் முக்கிய பணிகளாகும். இதுதவிர தடைநீக்கச் சான்றிதழ் வழங்கல் பொதுமக்களுக்கு மிகவும் நெருக்கமான 119 அவசர அழைப்புச் சேவை மூலம் பொதுமக்களின் புகார்களுக்கு உடனுக்குடன் பதில் அளிக்கும் சேவைகள் இடம்பெறுவதுடன் அதன் மூலம் காவல்துறை சேவைகளை மிக விரைவாக மக்களிடம் கொண்டு சேர்க்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைய அனைத்து காவல் நிலையங்களும், தலைமையக காவல் நிலையங்கள் மற்றும் சாதாரண காவல் நிலையங்கள் என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு காவல் நிலையமும் வெவ்வேறு நிலைகளின் கீழ் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளன. அதன்படி, A1 தரத்தில் 81 காவல் நிலையங்களும், A2 தரத்தைச் சேர்ந்த 103 காவல் நிலையங்களும், A3 தரத்தைச் சேர்ந்த 142 காவல் நிலையங்களும், 152 B தர காவல் நிலையங்களும், 74 C தர காவல் நிலையங்களும், 54 D தர காவல் நிலையங்களும் என மொத்தம் 607 காவல் நிலையங்கள் 2024.12.31 திகதி தரப்படுத்தப்பட்டுள்ளன. தலைமையகக் காவல் நிலையத்திற்குப் பொறுப்பாளராக ஒரு தலைமைப் பொலிஸ் பரிசோதகரும், ஏனைய பொலிஸ் நிலையங்களுக்குப் பொறுப்பான ஒரு நிலையத் பொறுப்பதிகாரி நியமிக்கப்பட்டு அவர்களுக்கு கீழ் பணிபுரியும் பொலிஸ் பரிசோதகர்கள், பொலிஸ் சார்ஜன்ட்கள் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் ஊடாக பொதுமக்களுக்கு நேரடியாக பொலிஸ் சேவைகளை வழங்குகின்றனர்.

பொலிஸ் கடமைகளுக்குத் தேவையான பல்வேறு நிபுணத்துவத்தைப் பெறுவதற்கான துணை சேவையும் இயங்கி வருகிறது, இதன் கீழ் மருத்துவர்கள், தாதிகள், பொறியியலாளர்கள், சமையல்காரர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற சிறப்பு சேவைகளுக்காக கிட்டத்தட்ட 1291 அதிகாரிகள் சிறப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். மேலும், இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள், இலங்கை கணக்காளர் சேவை அதிகாரிகள், இலங்கை திட்டமிடல் சேவை அதிகாரிகள் மற்றும் அரசாங்கத்தின் பல்வேறு சேவைகளை சேர்ந்த நிர்வாக அதிகாரிகள், மொழிபெயர்ப்பாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள், அலுவலக உதவியாளர்கள் போன்ற திணைக்களம் அல்லாத பதவிகளை சேர்ந்த அதிகாரிகள் மற்றும் குற்றவியல் நிபுணர், ஆராய்ச்சி அதிகாரி, அபிவிருத்தி உதவி அலுவலர் மற்றும் பல்வேறு தொழிலாளர் தொழில்களைச் சேர்ந்த திணைக்கள அதிகாரிகள் உட்பட 6000 க்கும் மேற்பட்ட சிவில் பணியாளர்கள் பொலிஸ் கடமைகளுக்கு ஆதரவை வழங்குவதில் ஈடுபட்டுள்ளனர். அதன்படி இலங்கை காவல்துறையின் அனைத்து மனித வளங்களையும் பௌதீக வளங்களையும் பயன்படுத்தி விசேட பணியொன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதன் மூலம் அடைந்த முன்னேற்றம் பின்வருமாறு.

- **குற்றங்கள் பதிவாதல் மற்றும் தீர்த்து வைத்தல்**

இலங்கை காவல்துறையின் முன்னேற்றத்தைப் பிரதிபலிக்கும் ஒரு முக்கிய குறிகாட்டியாக நாட்டில் குற்றப் புகார்களின் முழுமையான எண்ணிக்கையும் பதிவான குற்றங்களைத் தீர்ப்பதற்கான ஒப்பீட்டு விகிதமும் உள்ளன. கீழே உள்ள அட்டவணை 2023-2024 ஆண்டுகளில் குற்ற பதிவுகளின் எண்ணிக்கை மற்றும் குற்றத் தீர்வுகளைக் காட்டுகிறது.

புள்ளிவிபர அட்டவணை - 02

| குற்றங்களின் வகைகள் | 2023.01.01 இருந்து 2023.12.31 வரை | | 2024.01.01இருந்து 2024.12.31 வரை | |
|---|---|---|---|---|
| | பதிவாதல் | தீர்த்து வைத்தல் | பதிவாதல் | தீர்த்து வைத்தல் |
| பாரிய குற்றங்கள் | 44,969 | 31,515 | 39,320 | 27,968 |

| | | | | |
|---|---|---|---|---|
| சிறு முறைப்பாடுகள் | 932,946 | 846,485 | 935,753 | 893,805 |
| நபருகளுக்கு எதிரான சிறு குற்றங்கள் | 39,644 | 22,500 | 40,695 | 25,059 |
| சொத்துக்களுக்கு எதிரான சிறு குற்றங்கள் | 49,514 | 18,178 | 42,677 | 15,080 |
| திட்டமிடப்பட்ட தவறுகள் | 26,006 | 24,046 | 26,352 | 25,030 |
| மொத்தம் | **1,093,079** | **942,724** | **1,084,853** | **986,972** |

மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பாரிய குற்றங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டள்ள எண்ணிக்கையாகும். ஸ்ரீ லங்கா பொலிஸ் அல்லது மத்தியஸ்த சபைக்கு அனுப்பப்பட்டு அல்லது வழக்கு தாக்கல் செய்யப்பட்டு தீர்வு வழங்கி நிறைவு செய்யப்பட்டுள்ள சிறு முறைப்பாடுகள் மற்றும் சிறு தவறுகள் அதன் கீழ் தீர்த்து வைக்கப்பட்டவையாக காட்டப்பட்டுள்ளது.

- **பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் குற்றங்கள்**

மக்கள் சமூகத்தில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் விஷேட வகிபாகத்தை கொண்டுள்ளனர். எனவே குற்றங்கள் மற்றும் வன்முறைகள் அற்ற சமூகத்தை உருவாக்கும் போது பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் குற்றங்களை தடுத்தல் தொடர்பில் விஷேட முக்கியத்தவம் கிடைக்கிறது. 2023 – 2024 ஆண்டுகளில் பதிவான மற்றும் தீர்க்கப்பட்ட பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான குற்றங்களை தீர்த்து வைத்தல் தொடர்பான முன்னேற்றம் பின்வரும் புள்ளிவிபர அட்டவணையில் காட்டப்படுகிறது.

புள்ளிவிபர அட்டவணை **- 03**

| **குற்றங்களின் வகை** | **2023.01.01 இருந்து 2023.12.31 வரை** | | **2024.01.01 இருந்து 2024.12.31 வரை** | |
|---|---|---|---|---|
| | **பதிவாதல்** | **தீர்த்து வைத்தல** | **பதிவாதல்** | **பதிவாதல்** |
| சிறுவர்களுக்கு எதிரான குற்றங்கள் | 3,119 | 3,103 | 3,247 | 3,221 |
| பெண்களுக்கு எதிரான குற்றங்கள் | 759 | 754 | 732 | 724 |
| மொத்தம் | 3,878 | 3,857 | 3,984 | 3,945 |

- **வாகன விபத்துக்களின் எண்ணிக்கை**

சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதில் இலங்கை காவல்துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஒரு முக்கிய பணி போக்குவரத்தைக் கட்டுப்படுத்துவதாகும். 2023-2024 ஆண்டுகளில் நடந்த மொத்த போக்குவரத்து விபத்துகளின் எண்ணிக்கை கீழே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

புள்ளிவிபர அட்டவணை **- 04**

| **வருடம்** | **உயிரிழப்பு விபத்துக்கள்** | **பாரிய விபத்துக்கள்** | **சிறிய காயங்கள்** | **நட்டம்** | **உயிரிழப்பு எண்ணிக்கை** |
|---|---|---|---|---|---|
| 2023.01.01 இருந்து 2023.12.31 வரை | 2,231 | 6,673 | 9,492 | 6,498 | 2,341 |
| 2024.01.01 இருந்து 2024.12.31 வரை | 2,272 | 6,762 | 9,945 | 5,629 | 2,381 |

- 2024 ஆம் ஆண்டிற்கான விபத்து தரவுகள் மருத்துவ காரணங்களால் மாறக்கூடும்.

- **போதைப்பொருள் தொடர்பான குற்றங்கள்**

இலங்கை காவல்துறையின் போதைப்பொருள் பிரிவு, அனைத்து பிராந்திய பிரிவுகள், விசேட அதிடிப்படை மற்றும் கலால் வரித் திணைக்களம் மற்றும் பிற நிறுவனங்களின் அர்ப்பணிப்பு மற்றும் விசாரணைகளின் விளைவாக 2023-2024 ஆம் ஆண்டில் பதிவான கலால் மற்றும் மயக்கமூட்டும் குற்றங்களின் தீர்வு பின்வருமாறு.

புள்ளிவிபர அட்டவணை **- 05**

| குற்றங்களின் வகை | 2023.01.01 இருந்து 2022.12.31 வரை | | 2024.01.01 இருந்து 2024.12.31 வரை | |
|---|---|---|---|---|
| | பதிவாதல் | தீர்த்து வைத்தல் | பதிவாதல் | தீர்த்து வைத்தல் |
| மதுவரி குற்றம் | 218,177 | 195,845 | 262,979 | 249,432 |
| மயக்கமூட்டும் குற்றம் | 189,896 | 175,781 | 252,888 | 222,894 |
| **மொத்தம்** | 408,073 | 371,626 | 512,707 | 469,132 |

- **மோசடித் தவறுகள்**

மோசடித் தவறுகளின் கீழ் விபச்சாரத் தொழில், விபச்சார விடுதிகளை நடத்துதல், ஒரு பாலின உறவு போன்ற 06 வகுதிகளாக வகைப்படுத்தப்படுகின்றன. 2023 – 2024 வருடத்தின் மொத்த மோசடித் தவறுகள் பின்வருமாறானதாகும்.

புள்ளிவிபர அட்டவணை **- 06**

| குற்றங்களின் வகை | 2023.01.01. இருந்து 2023.12.31 வரை | | 2024.01.01. இருந்து 2024.12.31 வரை | |
|---|---|---|---|---|
| | பதிவாதல் | தீர்த்து வைத்தல் | பதிவாதல் | தீர்த்து வைத்தல் |
| மோசடித் தவறுகள் | 1,203 | 1,166 | 1,336 | 1,303 |

- **தண்டப் பணம் மூலம் ஈட்டப்பட்ட வருமானம்**

ஸ்ரீ லங்கா பொலீஸ் மூலம் நீதிமன்ற தண்டப் பணம், போக்குவரத்து தவறுகள் மற்றும் வாகன விபத்துக்கள் தொடர்பான வழக்குகளைத் தாக்கல் செய்ததன் மூலம் 2023 – 2024 ஆண்டில் ஒவ்வொரு வருமான மூலங்கள் மூலம் ஈட்டப்பட்ட தண்டப் பணத் தொகை பின்வரும் அட்டவணை 07 மூலம் காட்டப்படுகிறது.

புள்ளிவிபர அட்டவணை **- 07**

| வருமான மூலங்கள் | 2023.01.01. இருந்து 2023.12.31 வரை (ரூபா.) | 2024.01.01. இருந்து 2024.11.30 வரை (ரூபா.) |
|---|---|---|
| அபராதச் சீட்டு செலுத்துகை | 1,878,428,983.00 | 2,271,260,086.00 |
| போக்குவரத்து தவறுகள் தொடர்பாக வழக்கு தாக்கல் செய்தல். | 3,340,763,643.00 | 1,797,864,370.00 |
| வாகன விபத்துக்கள் தொடர்பான வழக்கு தாக்கல் செய்தல். | 194,743,120.00 | 166,543,015.00 |
| **மொத்தம்** | **5,413,935,746.00** | **4,235,667,471.00** |

(போக்குவரத்து மற்றும் குற்றங்கள் தொடர்பான வழக்குகளைப் பதிவு செய்தல் மற்றும் சாலை விபத்துகள் தொடர்பான வழக்குகளைப் பதிவு செய்தல் குறித்த அறிக்கை போக்குவரத்துத் தலைமையகத்திடமிருந்து பெறப்பட்டது, மேலும் அந்த அறிக்கைகள் இன்னும் போக்குவரத்துத் தலைமையகத்திற்குப் பெறப்படாததால் 2024.01.01 முதல் 2024.11.30 வரையிலான தரவுகள் மட்டுமே சேர்க்கப்பட்டுள்ளன.)

- **மக்கள் மனக்குறைகள் முகாமைத்துவம்**

பொதுமக்கள் குறைபாடுகளை முகாமைத்துவம் செய்வதற்காக பொதுமக்கள் உதவிக் கூடம், பொலீஸ் மா அதிபர் பொதுமக்கள் உதவித் தினம், 119 தொலைபேசிக் கூடம், பொலீஸ் மா அதிபரிடம் கூறுங்கள் நடவடிக்கைக் கூடம் ஆகிய பல்வேறு முகாமைத்துவ முறைகளும் ஸ்ரீ லங்கா பொலீஸ் மூலம் அமுல்படுத்தப்படுகிறது.

புள்ளிவிபர அட்டவணை - 08

| முகாமைத்துவ முறை | 2024.01.01 இருந்து 2024.12.31 இருந்து | | |
|---|---|---|---|
| | கிடைத்த முறைப்பாடுகள் தொகை | கிடைத்த முறைப்பாடுகள் தொகை | கிடைத்த முறைப்பாடுகள் தொகை |
| 119 தொலைபேசி கூடம் | 975,747 | 975,747 | - |
| பொதுமக்கள் உதவிக் கூடம் | 2,414 | 494 | 1,920 |
| பொலீஸ் மா அதிபர் உதவிக் கூடம் | 1,933 | 312 | 1,621 |

- **ஆட்சேர்ப்பு**

2024 ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான காலகட்டத்தில் இலங்கை காவல்துறைக்கு 390 அதிகாரிகள் புதிய காவல்துறை கான்ஸ்டபிள்களாகவும், காவல்துறை கான்ஸ்டபிள் ஓட்டுநர்களாகவும் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

புள்ளிவிபர அட்டவணை - 09

| பதவிகள் | உத்தியோகத்தர் எண்ணிக்கை | ஆட்சேர்ப்பு திகதி |
|---|---|---|
| கான்ஸ்டபிள்கள் | 353 | 2024.12.28 |
| | 01 | 2024.12.29 |
| | 01 | 2024.12.30 |
| | 05 | 2024.12.31 |
| கான்ஸ்டபிள் சாரதிகள் | 30 | 2024.12.28 |

- **பதவி உயர்வுகள்**

ஸ்ரீ லங்கா பொலீஸ் பதவி நிரலொழுங்குக்கு அமைய 261 தகைமை பெற்ற அலுவலர்களுக்கு 2024 வருடத்தில் பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது. அவற்றில் ஆகக் கூடுதலான அலுவலர்கள் பொலீஸ் கான்ஸ்ரபிள் பதவியிலிருந்து பொலீஸ் சார்ஜன்ற் பதவிக்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். அவ்வாறு பதவி உயர்வு பெற்ற அலுவலர்களின் எண்ணிக்கை 146 ஆகும். ஒவ்வொரு பதவிகளுக்கும் அமைய பதவி உயர்வு பெற்ற அலுவலர்களின் எண்ணிக்கை கீழே காட்டப்படுகிறது.

புள்ளிவிபர அட்டவணை - 10

| பதவி உயர்வு வழங்குதல் | | உத்தியோகத்தர் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| முன்னர் வகித்த பதவி | பதவி உயர்வு | சாதாரண சேவை | விஷேட அதிரடிப் படை | உதவி சேவை |
| பிரதி பொலிஸ் மாஅதிபர் | சிரேஸ்ட பொலிஸ் மாஅதிபர் | 1 | - | - |
| பொலீஸ் அத்தியட்சகர் | சிரேஸ்ட பொலீஸ் அத்தியட்சகர் | 42 | - | - |
| உதவி பொலீஸ் அத்தியட்சகர் | பொலீஸ் அத்தியட்சகர் | 25 | 3 | - |
| பொலீஸ் பரிசோதகர் | பிரதான பொலீஸ் பரிசோதகர் | 11 | - | - |
| உப பொலீஸ் பரிசோதகர் | பொலீஸ் பரிசோதகர் | 8 | - | 1 |
| பொலீஸ் சார்ஜன்ற் | உப பொலீஸ் பரிசோதகர் | 14 | 2 | - |
| பெண் பொலீஸ் சார்ஜன்ற் | பெண் உப பொலீஸ் பரிசோதகர் | 1 | - | - |
| பொலீஸ் கான்ஸ்ரபிள் | பொலீஸ் சார்ஜன்ற் | 144 | 2 | 4 |
| பெண் பொலீஸ் கான்ஸ்ரபிள் | பெண் பொலீஸ் சார்ஜன்ற் | 2 | - | - |
| பொலீஸ் கான்ஸ்ரபிள் சாரதி | பொலீஸ் சார்ஜன்ற் சாரதி | 1 | | |
| மொத்தம் | | 249 | **7** | **5** |

- **பொலீஸ் அலுவலர்களின் சேவையைப் பாராட்டுதல்**

அதிசிறப்பான சேவை மற்றும் மதிப்பீடு செய்யும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு 2024 வருடத்தில் 15792 பொலீஸ் அலுவலர்களுக்கு பின்வரும் பதக்கங்கள், விருதுகள் மற்றும் கொடுப்பனவுகள் வழங்குவதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

புள்ளிவிபர அட்டவணை **- 11**

| தொடர் இலக்கம் | பதக்கங்கள்/சின்னங்கள்/கொடுப்பனவுகள் | வர்த்தமானியில் வெளியிடுவதற்காக அனுப்பப்பட்ட அலுவலர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | ஸ்ரீ லங்கா பொலீஸ் சிறப்பு சேவை பதக்கம் | 1,137 |
| 02 | நீண்ட கால சேவை மற்றும் நன்நடத்தை பதக்கம் | 688 |
| 03 | நன்நடத்தை சேவைக் கொடுப்பனவு | 565 |
| 04 | மனிதாபிமான நடவடிக்கை பதக்கம் மற்றும் உறுதிக்கான பாராட்டு | 561 |
| 05 | ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் நடவடிக்கைக்கான பதக்கம் | 15 |
| 06 | நன்நடத்தை சின்னம் | 15,792 |

- **நலன்புரிச் செயற்பாடுகள்**

நாரஹென்பிட்டி மற்றும் குண்டசாலையில் உள்ள பொலீஸ் மருத்துவமனைகள் மூலம் ஸ்ரீ லங்கா பொலீஸ் சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் மற்றும் ஓய்வு பெற்ற அலுவலர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு சிகிச்சை வழங்கப்படுகிறது. 2024 ஜனவரி தொடக்கம் டிசம்பர் 31 திகதி வரை சிகிச்சை பெற்ற நபர்களின் சாராம்சம் வருமாறு.

புள்ளிவிபர அட்டவணை **- 12**

| தொ.இல | 2024.01.01 இருந்து 2024.09.30 வரை சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|
| **01.** | வெளிநோயாளர் பிரிவு நோயாளர்கள் | 82,543 |
| **02.** | க்ளினிக் பிரிவு நோயாளர்கள் | 155,645 |
| **03.** | வதிவிட நோயாளர்கள் | 6,701 |
| **04.** | சத்திர சிகிச்சை நோயாளர்கள் | 1,203 |

- **வழங்கல் பிரிவின் முன்னேற்றம்**

2024.07.04 திகதி பெல்ஜிய மெக்கானீஸ், ஜெர்மன் ஷெப்பர்ட் மற்றும் இங்கிலீஷ் ஸ்பானியல் ஆகிய இனங்களைச் சேர்ந்த 35 நாய்கள் நெதர்லாந்திலிருந்து கொள்முதல் முறையின் கீழ் பெறப்பட்டன. இறக்குமதி செய்யப்பட்ட 35 நாய்களில் 3 நாய்கள் ஏற்கனவே குட்டிகளைப் பெற்றெடுத்துவிட்டன. 35 நாய்களும் மிகவும் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் உள்ளதுடன் மிகவும் வினைத்திறனாக செயற்படுகின்றன.




வேகமாக வாகனம் ஓட்டுபவர்களை அடையாளம் காண இலங்கை காவல்துறைக்கு ரூ.93,038,119.91 மில்லியன் மதிப்புள்ள 30 ஸ்பீட் கன் சாதனங்களை கொள்முதல் செய்யும் பணி 31.12.2024 அன்று கொள்முதல் பிரிவால் வெற்றிகரமாக முடிக்கப்பட்டது.




## 2.1.3. அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முன்னேற்றம்

- **கட்டிட அபிவிருத்தி**

ஸ்ரீ லங்கா பொலீஸின் பொது உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக பொலீஸ் நிலையங்கள், பொலீஸ் அலுவலகங்கள், வீரர்களின் விடுதிகள், பயிற்சி நிலையங்கள் உள்ளிட்ட பொது கட்டிட நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கமைய, 2024 ஆம் ஆண்டில் 14 கருத்திட்டங்களுக்காக 432.25 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஸ்ரீ லங்கா பொலீஸின் கட்டிட நிர்மாணத்துக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட 432.25 மில்லியன் ரூபா நிதியில் இறுதி காலாண்டு வரை 333.72 மில்லின் ரூபா செலவிடப்பட்டுள்ளது.




**குறுத்துவவத்தை வீடமைப்பு கட்டுமானம்** **கொள்ளுபிட்டி பொலிஸ் நிலைய பராமரிப்பு**

பொலீஸ் அலுவலர்களின் தொழில்வாண்மையை விருத்தி செய்வதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் கட்டான பொலீஸ் பயிற்சி கல்லூரி மற்றும் களுத்துறை பொலீஸ் கல்லூரியில் அபிவிருத்தி செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2024 வருடத்தில் கட்டான பொலிஸ் பயிற்சி கல்லூரியின் அபிவிருத்திக்காக 77 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் 2024 ஆம் ஆண்டின் நிறைவில் செலவு 43.74 மில்லியன் ரூபா ஆகும்.



## 2.1.4. 2024 இந்த ஆண்டில் செயற்படுத்தப்பட்ட திட்டங்கள்

புள்ளிவிபர அட்டவணை - 13

| தொடர் இல | கருத்திட்டத்தின் பெயர் | மதிப்பீடு நிதி (ரூபா) | 2024 கொடுப்பனவு (ரூபா மி) |
|---|---|---|---|
| 1 | குமார ரத்னம் மாவத்தை திருமண உத்தியோகபூர்வ வீட்டுத் தொகுதியின் கட்டுமானம் | 1213.77 | 172.20 |
| 2 | மல்லாவி பொலிஸ் நிலையத்தின் எஞ்சிய கட்டுமானப் பணிகள் | 63.10 | 40.35 |
| 3 | நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலையத்தின் 3வது, 4வது, 5வது மற்றும் 6வது மாடிகளின் குழாய் அமைப்பு மற்றும் குளியலறைகளில் உள்ள குறைபாடுகளை சரிசெய்தல். | 30.46 | 14.76 |
| 4 | நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலையத்தின் எஞ்சிய வேலைகள் (பெனல் போட் பொருத்துதல்) | 22.93 | 6.59 |
| 5 | பெரசவி கட்டிடங்களை நிர்மாணித்தல் | - | 0.55 |
| 6 | நாரஹேன்பிட்டி பொலிஸ் போக்குவரத்து பிரிவின் மின்மாற்றிக்கான கட்டிடம் கட்டுதல் | 6.03 | 4.95 |
| 7 | போதைப்பொருள் அழித்தல் எரியூட்டி மற்றும் வசதி கட்டிடத்தை நிறுவுதல். வனாதவில்லுவ | 5.28 | 1.06 |
| 8 | குருந்துவத்த படைவீரர் வீடமைப்பில் தீயை அணைக்கும் அமைப்பு | 18.19 | - |
| | சிவில் வேலைகள் மற்றும் மின்கட்டமைப்பு | 48.00 | 7.34 |
| 9 | முல்லைத்தீவு காவல் நிலைய கட்டுமானப் பணிகளின் எஞ்சிய பணிகள் | 269.21 | 34.50 |
| 10 | வெலிகம காவல் நிலைய கட்டுமானப் பணிகளின் எஞ்சிய பணிகள | 268.72 | 29.21 |
| 11 | அதிகாரப்பூர்வ நாய் தலைமையகத்தில் பயிற்சி கட்டிடத்திற்கு அடுத்ததாக கட்டப்பட்ட கொங்கிரீட் ஸ்லாப்பில் கூரை கட்டுமானம். | 2.70 | - |
| 12 | கொள்ளுப்பிட்டி காவல் நிலைய புதுப்பித்தல் மற்றும் படைவீரர் குடியிருப்பு கட்டுமானம் | 223.00 | 11.29 |
| 13 | கொழும்பு 11 ஓல்காட் மாவத்தை கேட்போர் கூடத்தின் மீதமுள்ளன கட்டுமானப் பணிகள் | 122.92 | - |
| 14 | நகராட்சி போக்குவரத்து கட்டிடத்தின் கட்டுமானம் | 841 | - |
| 15 | திருக்கோவில் காவல் நிலையக் கட்டுமானம் | 43.26 | - |
| 16 | நாரஹேன்பிட்டி காவல் நிலையத்தில் மீதமுள்ள பணிகள் (தீயணைக்கும் உபகரண அமைப்பைத் தயாரித்தல்) | 129.86 | - |
| 17 | நாரஹேன்பிட்ட காவல் நிலையத்தில் எஞ்சிய வேலைகள் (பூச்சிடல்) | 20.00 | - |
| **கட்டான தேசிய காவல் பயிற்சி நிறுவனம்** | | | |
| 1 | கட்டான தேசிய காவல் பயிற்சி நிறுவனத்தின் நிர்வாகக் கட்டிடத்தின் கட்டுமானம் | 289.13 | 23.49 |
| 2 | கட்டான தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனத்தில் பொலிஸ் பொறுப்பதிகாரிக்கான உத்தியோகபூர்வ இல்லத்தின் கட்டுமானம். | 44.14 | 20.25 |
| 3 | கட்டான தேசிய காவல் பயிற்சி நிறுவனத்தில் தங்குமிடக் கட்டிடத்தின் கட்டுமானம். | 1,013.98 | - |
| **களுத்துறை பொலிஸ் பயிற்சி கல்லூரி** | | | |
| 1 | களுத்துறை பொலிஸ் பயிற்சி கல்லூரியில் விடுதி கட்டிடத்தின் கட்டுமானம். | 484.30 | - |

## 2.1.5. நிதி முன்னேற்றம்

202 ஆம் ஆண்டில் ஸ்ரீ லங்கா பொலிஸ்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டின் அளவு மற்றும் ஆண்டு இறுதியில் பொலிஸ் நடவடிக்கைகளுக்காக கிடைத்த நிதி ஒதுக்கீடுகளிலிருந்து மேற்கொள்ளப்பட்ட செலவுகளின் சாராம்சம் கீழே காட்டப்படுகிறது.

புள்ளிவிபர அட்டவணை - 14

| செலவு வகை | 2024 நிதி ஒதுக்கீடு (ரூ) | 2024.12.31 வரை (ரூ) | செலவு வீதம் |
|---|---|---|---|
| மீண்டெழும் | 119,238,100,000.00 | 117,017,944,148.86 | 98% |
| மூலதனம் | 5,967,000,000.00 | 4,063,859,909.65 | 68% |

## 2.1.6. நிறுவனத்தின் இடைக்கால இலக்குகள் 2025 – 2027

புள்ளிவிபர அட்டவணை - 15

| இடைக்கால இலக்குகளின் கீழ் செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ள புதிய செயற்றிட்டங்கள் | | | | |
|---|---|---|---|---|
| தொ. இல | செயற்றிட்டங்கள் | 2025 எதிர்பார்க்கப்படுகின்ற செலவு ரூபா மி | 2026 எதிர்பார்க்கப்படுகின்ற செலவு ரூபா மி | 2027 எதிர்பார்க்கப்படுகின்ற செலவு ரூபா மி |
| 1 | குமார ரத்னம் மாவத்தை திருமண உத்தியோகபூர்வ வீட்டுத் தொகுதியின் கட்டுமானம் | 200.00 | 300.00 | 179.03 |
| 2 | பெரசவி கட்டிடங்களை நிர்மாணித்தல | 2.00 | 2.00 | |
| 3 | வெலிகம பொலிஸ் நிலையத்தின் எஞ்சிய கட்டுமானப் பணிகள் | 107.06 | - | - |
| 4 | நாரஹேன்பிட்ட காவல் நிலையத்தில் எஞ்சிய வேலைகள் (பூச்சிடல்) | 20.00 | - | - |
| 5 | அதிகாரப்பூர்வ நாய் தலைமையகத்தில் பயிற்சி கட்டிடத்திற்கு அடுத்ததாக கட்டப்பட்ட கொங்ரீட் ஸ்லாப்பில் கூரை கட்டுமானம். | 1.70 | - | - |
| 6 | நாரஹேன்பிட்டி காவல் நிலையத்தில் மீதமுள்ள பணிகள் (தீயணைக்கும் உபகரண அமைப்பைத் தயாரித்தல்) | 30.00 | 99.86 | - |
| 7 | முல்லைத்தீவு காவல் நிலைய கட்டுமானப் பணிகளின் எஞ்சிய பணிகள் | 75.00 | 140.72 | - |
| 8 | குருந்துவத்த படைவீரர் வீடமைப்பில் தீயை அணைக்கும் அமைப்பு | 33.00 | 79.23 | - |
| 9 | வடமேற்கு இசைக்குழு பிரிவின் அதிகாரிகளுக்கான படைவீரர் வீடமைப்பு கட்டுமானம். | 5.05 | - | - |
| 10 | கொள்ளுப்பிட்டி காவல் நிலைய பழுதுபார்த்தல் மற்றும் படைவீரர் குடியிருப்பு கட்டுமானம் | 50.00 | 104.72 | - |
| 11 | கொள்ளுப்பிட்டி காவல் நிலைய பழுதுபார்த்தல் மற்றும் படைவீரர் குடியிருப்பு கட்டுமானம் | 35.93 | - | - |

| | | | | |
|---|---|---|---|---|
| 12 | நகராட்சி போக்குவரத்து கட்டிடத்தின் கட்டுமானம் | 50.00 | 400.00 | 391.00 |
| 13 | மல்லாவி பொலிஸ் நிலையத்தின் நிர்மாணம் | 12.00 | 48.00 | |
| 14 | திருக்கோவில் பொலிஸ் நிலையத்தின் நிர்மாணம் | 8.65 | 34.61 | - |
| 15 | கெகிராவ பொலிஸ் நிலையத்தின் நிர்மாணம் | 12.74 | 20.00 | 30.99 |
| 16 | மீரிகம பொலிஸ் நிலையத்தின் நிர்மாணம் | 17.15 | 25.00 | 43.63 |
| | மொத்தம் | **660.82** | **1254.2** | **644.65** |

**கட்டான தேசிய காவல் பயிற்சி நிறுவனம 2104-10-1-1-225**

| தொ. இல | செயற்றிட்டங்கள் | **2025** எதிர்பார்க்கப்படுகின்ற செலவு ரூபா மி | **2026** எதிர்பார்க்கப் படுகின்ற செலவு ரூபா மி | **2027** எதிர்பார்க்கப்படுகின்ற செலவு ரூபா மி |
|---|---|---|---|---|
| 1 | கட்டான தேசிய காவல் பயிற்சி நிறுவனத்தின் விடுதி கட்டிடத்தின் கட்டுமானம் | 50 | 300 | 463 |

**களுத்துறை பொலிஸ் பயிற்சி கல்லூரி 2104-10-1-1-225**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | களுத்துறை பொலிஸ் கல்லூரி விடுதி கட்டிடத்தின் கட்டுமானம். | 145.29 | 339.01 | - |

## 2.2. விஷேட அதிரடிப்படை

### 2.2.1. அறிமுகம்

1980 ஆம் ஆண்டின் முற்பகுதியில் வடக்கில் தீவிரவாதிகளின் செயற்பாடுகள் அதிகரித்தமையின் காரணமாக அப்பிரதேசங்களின் பொலீஸ் நிலையங்களுக்கு பாதுகாப்பு வழங்குதல் மற்றும் தீவிரவாத செயற்பாடுகளை தடுப்பதனை நோக்காகக் கொண்டு பொலீஸ் திணைக்களத்தில் ஒரு விசேட ஆயுதப் படையணியை நிறுவுவதற்காக 60 பொலீஸ் உத்தியோகத்தர்களைக் கொண்ட குழுவை தேர்ந்தெடுத்து அக்குழுவிற்கு இலங்கை இராணுவத்தினரால் விசேட ஆயுதப் பயிற்சியினை வழங்கி ஆரம்பக் கட்டமாக வட பிரதேச பொலிஸ் நிலையங்களின் பாதுகாப்பிற்காக பயன்படுத்தப்பட்டனர். இந்த சிறிய குழு வெற்றிகரமாக செயற்பட்டமையினால் அதனை விரிவுபடுத்தி வெளிநாட்டு பயிற்சியாளர்கள் தேவையான பயிற்சிகளை வழங்கி “விசேட அதிரடிப்படை” எனும் பெயரில் நேரடியாக வடக்கு கிழக்கு பிரதேசங்களில் செயற்படும் தீவிரவாதிகளை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டமையினால் நாட்டில் அமைதியான சூழலை ஏற்படுத்துவதற்குத் தேவையான பங்களிப்பு கிடைத்தது.

தற்போது சுமார் 7500 அலுவலர்களைக் கொண்டுள்ள விசேட அதிரடிப்படை நாடு பூராகவும் 73 முகாம்களைக் கொண்டுள்ளதுடன் குற்ற செயல்கள், போதைப்பொருள் விற்பனை, பாரியளவிலான காடழிப்பு, சட்ட விரோத மாணிக்கக்கல் அகழ்வு, சூழலை மாசடைய செய்தல், போதைப்பொருள் கடத்தல் போன்ற சட்ட விரோத செயல்கள் மற்றும் சமூக விரோத செயல்கள் தொடர்பில் நேரடியாக சட்டத்தை நடைமுறைப்படுத்துவதுடன் ஏனைய குற்றங்கள் மற்றும் தவறுகள் தொடர்பாகவும் உரியவாறு சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு பொலிஸாருக்குத் தேவையான உதவிகளை வழங்குகின்றது.

அதற்கு மேலதிகமாக மேன்மைதங்கிய ஜனாதிபதி, மாண்புமிகு பிரதமர், ஏனைய விசேட பிரதிநிதிகள் மற்றும் வெளிநாடுகளிலிருந்து வருகைத்தரும் அரச தலைவர்கள் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் விசேட அதிரடிப்படையினரின் விஷேடமான கருமமாகும்.

- **அமைப்பின் நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள்**

  i. பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள்.
  ii. திட்டமிடப்பட்ட குற்றம் மற்றும் போதைப்பொருள் தடுப்பு.
  iii. பிரமுகர் பாதுகாப்பு கடமைகள்.
  iv. சுற்றுச்சூழல் குற்றங்களுக்காக கைது
  v. வெளிநாட்டு பிரமுகர்களுக்கு பாதுகாப்பு வழங்குதல்.
  vi. தேடுதல் மற்றும் வெடிகுண்டு அகற்றும் கடமைகள்.
  vii. சட்டம் ஒழுங்கைப் பேணுவதில் இலங்கை காவல்துறைக்கு உதவுதல்.
  viii. நெடுஞ்சாலை தீ அணைப்பு மற்றும் உயிர் காக்கும் கடமைகள்.
  ix. பொலிஸ் அதிகாரிகள், ராணுவ வீரர்கள் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு சிறப்பு பயிற்சி வகுப்புகளை வழங்குதல்.

### 2.2.2. விஷேட அதிரடிப்படை செயற்பாடுகளின் முன்னேற்றம்

- **மனித வள அபிவிருத்தி**

விஷேட அதிரடிப்படையின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணி 10,745 என்பதுடன், 2024.12.31 திகதியில் உண்மையான ஆளணி எண்ணிக்கை 7,511 ஆகும். மீளாய்வுக் காலத்தில் பதிவியில் உள்ளவர்களுக்கு 872 தனிநபர் பதவியுயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. 409 பொது உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்களின் எண்ணிக்கைக்கு அமைய நிறுவனத்தில் 3,897 வெற்றிடங்கள் நிலவுகின்றன.

- **பயிற்சி மற்றும் அபிவிருத்தி**

விசேட அதிரடிப்படையினருக்கு ஒதுக்கப்பட்ட பணிகளுக்குத் தேவையான அறிவு மற்றும் திறன்களை மேம்படுத்துவதற்காக மதிப்பாய்வு காலகட்டத்தில் அதிகாரிகளுக்கு பல உள்ளக சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. மேலும் வெளிப்புற நிறுவனங்களால் வழங்கப்படும் 134 பயிற்சி பாடநெறிகள் மூலம் 3,330 விசேட அதிரடிப்படையினருக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. விசேட அதிரடிப்படை பயிற்சிப் பாடசாலையில் நடத்தப்பட்ட 12 பாடநெறிகளில் பிற நிறுவனங்களைச் சேர்ந்த 331 அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் பயிற்சி பெற்றுள்ளனர். இலங்கை கடற்படையுடன் 03 ஒன்றிணைந்த பாடநெறிகள் நடத்தப்பட்டு இதன் மூலம் 62 விசேட அதிரடி படையினர் மற்றும் 29 கடற்படை அதிகாரிகள் மதிப்பாய்வு காலகட்டத்தில் பயிற்சி பெற்றுள்ளனர்.

- **மீளாய்வு காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளின் அளவு மற்றும் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களின் எண்ணிக்கை**

புள்ளிவிபர அட்டவணை **- 16**

| **துறை** | | **வெற்றிகரமான நடவடிக்கைகளின் எண்ணிக்கை** | **கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| சட்டவிரோத போதைப்பொருள் சுற்றிவளைப்பு | உலர்ந்த கஞ்சா / கேரள கஞ்சா / கஞ்சா தோட்டங்கள் | 892 | 703 |
| | ஹெரோயின் | 919 | 928 |
| | பிற போதைப்பொருட்கள் (ஐஸ், கொக்கெய்ன்) | 1,377 | 1,388 |
| | சிகரட் | 143 | 146 |
| | போதை மாத்திரை / போதை உருண்டை | 173 | 172 |
| மதுவரி | சட்ட விரோத மதுபானம் / அரச சாராயம் / வெளிநாட்டுச் சாராயம் | 985 | 976 |
| சட்டவிரோத வெடிபொருள் கைப்பற்றல்கள் | | 347 | 305 |
| சட்ட விரோத கனிமங்கள் தொடர்பான சுற்றிவளைப்புகள் | மணல் | 644 | 705 |
| | மண் | 135 | 144 |
| | இரத்தினக் கல் அகழ்வு | 197 | 517 |
| பிற சட்ட விரோத செயற்பாடுகள் தொடர்பான சுற்றிவளைப்புகள | மரம் | 427 | 502 |
| | வல்லப்பட்டை | 02 | 02 |
| | துன்புறுத்தும் வகையில் கால்நடைகளை ஏற்றிச் செல்லுதல் | 28 | 44 |

| | | | |
|---|---|---|---|
| | இறைச்சி | 55 | 65 |
| | புதையல் தோண்டுதல் | 35 | 99 |
| | கழிவு தேயிலை | 13 | 16 |
| | பிற | 428 | 502 |
| பிற சட்ட விரோத செயற்பாடுகளின் மொத்தம் | | 988 | 1,230 |
| **முழு மொத்தம்** | | 6,800 | 7,214 |

மீளாய்வு காலத்தில் திட்டமிடப்பட்ட குற்ற கும்பல்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரர்களால் நாட்டில் சட்ட விரோதமாக பாவிக்கப்பட்ட 386 துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டதுடன், 035 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர். மேலும் 220 ஏக்கர் கஞ்சா தோட்டங்களும், 1,323.08 கிலோகிராம் உலர்ந்த கஞ்சா மற்றும் கேரள கஞ்சா, 131.57 கிலோகிராம் ஹெரோயின், 89.05 கிலோகிராம் ஐஸ், 738 கியூப் மணல், 8,714 மரப்பலகைகள் மற்றும் மரக்குத்திகள் ஆகியவையும் கைப்பற்றப்பட்டுள்ளன. குறித்த காலத்தில் கைப்பற்றல்கள் ஊடாக அரசுக்குக் கிடைத்த அபராத தொகை ரூபா 13,224,992.00 ஆகும்.

- **ஐக்கிய நாடுகளின் சமாதானப் படை கடமைகள்**

அமைச்சரவையின் அங்கீகாரத்துக்கு அமைய 160 விஷேட அதிரடிப்படை அலுவலர்கள் ஆயுதம் தரித்த பொலீஸ் அணிகளில் கடமை மேற்கொள்வதற்காகவும், 40 அலுவலர்கள் மேற்குறிப்பிட்ட அலுவலர்களுக்கு உதவுவதற்காகவும் விஷேட ஆயுத மற்றும் தந்திரோபாய அணிகள் என்ற வகையில் 200 அலுவலர்கள் ஐக்கிய நாடுகளின் சமாதானப் படை கடமைகளில் ஈடபடுத்துவதற்காக பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். குறித்த செயற்பாட்டுக்குத் தேவையான வாகனங்கள் மற்றும் பொருட்களைக் கொள்வனவு செய்யும் செயற்பாடுகள் தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் அவதானிப்பு அணி வருகைதந்து விஷேட அதிரடிப்படையின் சமாதானப் படையணியை UN Peacekeeping Capability Readiness System (PCRS) இன் 03 ஆவது மட்டத்துக்கு தரமுயர்த்தப்பட்டுள்ளதாக 2024.04.29 திகதி எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய சமாதான பொலீஸ் படையணி கடமைக்கு புறப்படுவதற்குத் தேவையான Rapid Deployment Level - (RDL) மட்டம் வரை உயர்த்தப்பட்டுள்ளதுடன், குறித்த திகதியிலிருந்து 60 நாட்களுக்குள் சமாதான படையணி கடமைகளில் ஈடுபடுத்த தகைமை கிடைக்கும். அத்துடன் Rapid Deployment Level - (RDL) மட்டத்துக்கு தரமுயர்த்தப்பட்ட நாள் தொடக்கம் பராமரிப்பு கிரயத்தில் 25% ஐக்கிய நாடுகள் அமைப்பினால் செலுத்தப்படும்.

மேற்குறித்த ஐக்கிய நாடுகளின் சமாதான பொலீஸ் படையணி கடமை கருத்திட்டம் 2017 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு, தற்போது இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. தற்போதைய நிலையில் கருத்திட்டத்துக்காக இராஜதந்திர ரீதியான தலையீடு மேற்கொள்வதற்காக 2024.09.14 திகதி அ.ப/24/1788/626/023 இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் ஊடாக கருத்திட்டத்தை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்குமாறு தொடர்புடைய தரப்பினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.



- **உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி**
  - விசேட அதிரடிப் படை தலைமையகத்தின் முறையான மற்றும் திறமையான செயற்பாட்டை உறுதி செய்வதற்காக ரூ. 14.0 மில்லியன் செலவிடப்பட்டு குற்ற அறை மற்றும் அலுவலகத்திற்காக இரண்டு மாடி கட்டிடத்தை புதுப்பித்தல்.



  - விசேட அதிரடிப்படையின் பொலிஸ் கொஸ்தாபல் முதல் பிரதான பொலிஸ் பரிசோதகர் வரை (ஆண்/பெண்) திருமணமாகிய உத்தியோகர்களுக்காக ராஜகிரிய கலுபலுவாவ முகாமில் ரூபா 388 மில்லியன் செலவிடப்பட்டு 36 உத்தியோகபூர்வ இல்லங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.



  - விசேட அதிரடிப் படை ஜயவர்தனபுர முகாமை சிறப்பு நடவடிக்கை கட்டளைப் பிரிவாக நவீனமயமாக்குவதற்குத் தேவையான ரூ. 48.3 மில்லியன் மதிப்புள்ள பொருட்கள் வாங்கப்பட்டதுடன் இந்த திட்டம் இலங்கை கடற்படையின் பொறியியல் பிரிவின் அதிகாரிகள் மற்றும் விசேட அதிரடிப்படை பணிக்குழுவின் கட்டிட பிரிவின் அதிகாரிகளின் உழைப்பின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டு 2024.08.13 அன்று திறந்து வைக்கப்பட்டது. அந்த முகாமில் உள்ள விசேட அதிரடிப்படையின் அவசரகால நடவடிக்கைகளுக்கு பதிலளிக்கும் நவீன சிறப்பு செயற்பாட்டு கட்டளையாக நவீனமயமாக்கப்பட்டு சிறப்பு ஆயுதங்கள் மற்றும் தந்திரோபாயக் குழு, மோட்டார் சைக்கிள் குழு மற்றும் பொதுமக்கள் ஒழுங்கு முகாமைத்துவ குழுவை இங்கு நிறுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

- **வாகன தரிப்பிடத்தை நவீனமயப்படுத்தல்**
  - 2024.01.01 முதல் 2024.12.31 வரை, விசேட அதிரடிப்படையின் வாகனங்களை நவீனமயமாக்குவதற்காக “2003 செலவு விடயத்தின்” கீழ் ரூ. 79,976,837.79 செலவிடப்பட்டு 08 ஜீப்கள், 03 பஜெரோக்கள் மற்றும் 06 டிரக்டர் டிரெய்லர் பவுசர்கள் நவீனமயமாக்கப்பட்டன. மேலும் உதிரி பாகங்களைப் பயன்படுத்தி பல்வேறு வகையான வாகனங்கள் பழுதுபார்க்கப்பட்டன.



- **நிறுவனத்தால் ஈட்டப்பட்ட வருமானம்**

விஷேட அதிரடிப்படை மூலம் 2024 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வெற்றிகரமான சுற்றிவளைப்புகளுக்காக நீதிமன்ற செயற்பாடுகளின் நிறைவில் ஈட்டப்பட்ட பணத்தொகை 17 ஆவது அட்டவணை மூலம் காட்டப்படுகிறது.

புள்ளிவிபர அட்டவணை **– 17**

| வருமான மூலங்கள் | 2023.01.01. தொடக்கம் 2023.12.31 வரை (ரூபா) | 2024.01.01. தொடக்கம் 2024.12.31 வரை (ரூபா) |
|---|---|---|
| வெற்றிகரமான சுற்றிவலைப்புகளுக்கு நீதிமன்ற நடவடிக்கைகளின் முடிவில் வசூலிக்கப்படும் அபராதங்கள் | 48,029,117.39 | 1,497,101,511.00 |

## 2.2.3 நிதி முன்னேற்றம்

2024 ஆம் ஆண்டுக்கான விசேட அதிரடிப்படைக்கு ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டின் அளவு மற்றும் அந்த ஆண்டில் செயற்பாடுகளுக்காகப் பெறப்பட்ட ஒதுக்கீட்டிலிருந்து ஏற்பட்ட செலவுகளின் சுருக்கம் பின்வருமாறு.

புள்ளிவிபர அட்டவணை **- 18**

| செலவு வகை | 2024 நிதி ஒதுக்கீடு (ரூ) | 2024.12.31 வரை (ரூ) | செலவு வீதம் |
|---|---|---|---|
| மீண்டெழும் | 12,884,815,000 | 12,837,395,166.34 | 99% |
| மூலதனம் | 512,500,000.00 (2509 தவிர) | 493,807,171.99 | 96% |
| | 300,000,000.00 (2509 UN MISSON) | 91,634,415.21 | 30% |

## 2.2.4. நிறுவனத்தின் இடைக்கால இலக்கு 2025 - 2027

- 2025, 2027 ஆண்டுகளுக்கான பாதீட்டு ஒதுக்கீடு கோரிக்கைகள்

புள்ளிவிபர அட்டவணை **- 19**

| செயற்றிட்டங்கள்/கருத்திட்டங்கள் | 2025 (ரூ.மி) | 2026 (ரூ.மி) | 2027 (ரூ.மி) |
|---|---|---|---|
| 189-1-3 | 19,479,566.00 | 21,427,523.00 | 22,388,407.00 |

## 2.3 குடிவரவு, குடியகல்வு திணைக்களம்

### 2.3.1 அறிமுகம்

1948 / 20 இலக்க குடிவரவு, குடியகல்வு சட்டம் மற்றும் அதன் திருத்தங்களும், 1956 குடிவரவு குடியகல்வு சட்டத்துக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் அவற்றின் திருத்தங்களும், பிரஜாவுரிமை வழங்குதல் தொடர்பான சட்டம் மற்றும் அதன் திருத்தங்களும் அடங்கிய ஏற்பாடுகளின் கீழான சட்ட ரீதியான அதிகாரத்துடன் குடிவரவு, குடியகல்வு திணைக்களம் செயற்படுகிறது.

- **பிரதான கருமங்கள்**

  - இலங்கை பிரஜை அல்லாத நபர்கள் இலங்கைக்குள் நுழைவதனை கட்டுப்படுத்துதல், இலங்கையர்கள் மற்றும் வெளிநாட்டவர்கள் நாட்டிலிருந்து வெளியேறுதலை முறைமைப்படுத்துதல் மற்றும் இலங்கை பிரஜைகள் அல்லாத பொருத்தமற்ற நபர்களின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல் மற்றும் நாட்டிலிருந்து வெளியேற்றுதல்
  - இலங்கைப் பிரஜைகளுக்கு கடவுச் சீட்டுகளை வழங்குதல்
  - வெளிநாட்டவர்களுக்கு வீசா வழங்குதல்
  - இலங்கைப் பிரஜாவுரிமை வழங்குதல்
  - இரட்டைப் பிரஜாவுரிமை வழங்குதல்

### 2.3.2. குடிவரவு, குடியகல்வு திணைக்கள செயற்பாடுகளின் முன்னேற்றம்

- **நிறுவனத்தின் செயற்பாட்டுக் கருமங்களின் முன்னேற்றம் மற்றும் பௌதீக வள அபிவிருத்தி**

குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தினால் இலங்கையர் அல்லாத நபர்கள் நாட்டுக்குள் நுழைதல் மற்றும் வெளியேறுதலை முறைமையாக கட்டுப்படுத்துதல், நாட்டில் தங்கியிருக்கும் இலங்கைப் பிரஜைகள் அல்லாத நபர்களின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல், இலங்கையர்களின் அடையாளத்தை வெளிநாடுகளில் உறுதிப்படுத்ததல், கடவுச் சீட்டுகளை வழங்குதல், வெளிநாட்டவர்களுக்கு வீசா வழங்குதல், பிரஜாவுரிமை வழங்குதல் நிறுவனத்தின் முதன்மைக் கருமங்களாகும். அத்துடன் நவீன தொழில்நுட்ப முறைமைகளை பாவித்து சேவைநாடிகளுக்கு மிகவும் வினைத்திறனான, நட்புறவான சேவைகளை வழங்கி செயற்படுகிறது.

நிறுவனம் ஒரு நாளில் சேவை வழங்குவதற்காக திட்டமிடப்பட்டுள்ள அளவையும் தாண்டி விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளதுடன், மனித மற்றும் பௌதீக வளங்களைப் பாவித்து கடவுச்சீட்டு வினியோகம் உள்ளிட்ட திணைக்களத்தால் மேற்கொள்ளப்படும் ஏனைய பிரதான கருமங்களின் முன்னேற்றம் பின்வருமாறானதாகும்.

- **கடவுச்சீட்டு விநியோக முன்னேற்றம்**

புள்ளிவிபர அட்டவணை **- 20**

| ஆண்டு | அனைத்து நாடுகள் | கடமை | இராஜதந்திர | அவசர சான்றிதழ் | அடையாள சான்றிதழ் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 2019 | 545,883 | 1,585 | 314 | 19,674 | 1 | 571,373 |
| 2020 | 204,081 | 404 | 175 | 4,738 | 0 | 209,411 |
| 2021 | 381,301 | 860 | 398 | 1 | 0 | 382,560 |
| 2022 | 910,138 | 711 | 249 | 590 | 1 | 911,689 |
| 2023 | 900,388 | 1,112 | 241 | 8,839 | 2 | 910,582 |
| 2024 | 569,960 | 1,400 | 342 | 15,389 | 0 | 587,091 |




- **வீசா விநியோக முன்னேற்றம்**

புள்ளிவிபர அட்டவணை **- 21**

| விபரம் | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 |
|---|---|---|---|---|---|---|
| இ - நடமாட்ட அங்கீகாரம் வழங்குதல் | 1,533,386 | 374,068 | 234,313 | 691,427 | 1,635,268 | 1,087,368 |
| இ - வீசா வழங்குதல் | | | | | | 373,282 |
| வதிவிட வீசா வழங்குதல் | 22,600 | 9,243 | 15,809 | 22,318 | 23,311 | 19,659 |
| வதிவிட வீசா நீடித்தல் | 34,596 | 29,691 | 28,595 | 27,392 | 22,639 | 21,822 |
| குறுங்கால வீசா நீடித்தல் (சுற்றுலா மற்றும் பல்தடவை நுழைவு வீசா) | 61,031 | 31,985 | 20,246 | 41,775 | 27,941 | 42,230 |
| இரட்டை பிரஜாவுரிமை பெற்றமை காரணமாக வீசா தேவையிலிருந்து விடுவித்தல் (இலங்கையர்கள்) | 1,488 | 339 | 468 | 998 | 3,633 | 1,863 |




- **பிரஜாவுரிமை சட்டத்துக்கு அமைய வழங்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை**

புள்ளிவிபர அட்டவணை **- 22**

| பிரிவு | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 | 2024. |
|---|---|---|---|---|---|---|
| 5(2) பிரிவு | 11,533 | 13,800 | 16,602 | 9,329 | 8,483 | 10,942 |
| 8 பிரிவு | 03 | 02 | 01 | 02 | 08 | 01 |
| 11 பிரிவு | 22 | 20 | 42 | 58 | 52 | 168 |
| 12 பிரிவு | 04 | 03 | 06 | 04 | 08 | 08 |
| 19 (2) / 19 (3) பிரிவு | 9,147 | 2,267 | 4,654 | 7,166 | 7,387 | 7,904 |
| 20 பிரிவு | 58 | 55 | 196 | 92 | 173 | 212 |

- **2024 ஆண்டில் அமுல்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றம்**

புள்ளிவிபர அட்டவணை **- 23**

| **திட்டம்** | 2024 **அங்கீகரிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு (ரூ.மி)** | **நிதி முன்னேற்றம்** | **பௌதீக முன்னேற்றம்** |
|---|---|---|---|
| வவுனியா பிராந்திய அலுவலகத்தை புதிய கட்டிடத்துக்கு மாற்றுதல் | 11.40 | 100% | 100% |
| இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை மேம்படுத்துதல் | 5.00 | 97% | 75% |
| வாகன பராமரிப்பு | 13.00 | 100% | 80% |
| அலுவலக தேவைக்கு அமைய அலுவலக தளபாடங்கள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் | 5.00 | 97% | 100% |
| 12 Laminator Machine கொள்வனவு செய்தல் | 15.00 | 100% | 100% |
| 50 Laptop கொள்வனவு செய்தல் | 35.00 | 70% | 100% |
| 75 Computers கொள்வனவு செய்தல் | 28.00 | - | 80% |
| Networking Tools கொள்வனவு செய்தல் | 4.00 | 91% | 100% |
| 5 Token Printers கொள்வனவு செய்தல் | 0.50 | - | 100% |
| Printers கொள்வனவு செய்தல் | 1.50 | 30% | 100% |
| அலுவலக தேவைக்கு ஏற்ப இயந்திரங்களைக் | 5.00 | 44% | 100% |

| | | | |
|---|---|---|---|
| கொள்வனவு செய்தல் | | | |
| 5 Note Books கொள்வனவு செய்தல் | 4.5 | - | 100% |
| Kaspersky virus guard | 9.00 | 100% | 100% |
| தரைமை அலுவலகத்தில் Data Centre க்கு Core switch, other switches கொள்வனவு செய்தல் | 50.00 | 70% | 100% |
| CCTV நிறுவுதல் | 19.00 | - | 80% |
| கட்டுநாயக்கா ஓய்வகத்தை நவீனமயப்படுத்துதல் | 1.00 | 100% | 100% |
| Visa System re-vamp | 32.00 | 100% | 100% |
| கொள்கைப் பிரிவுக்கு ஆவண முகாமைத்துவ கட்டமைப்பை நிறுவுதல் | 19.20 | 100% | 100% |
| Windows License | 8.60 | 76% | 100% |
| ஊழியர்களுக்கான பயிற்சி | 5.00 | 81% | 100% |
| 500,000 வெற்று கடவுச்சீட்டுக்களை கொள்வனவு செய்தல் | 835.00 | 100% | 100% |
| 500,000 இலத்திரனியல் கடவுச்சீட்டுகளை கொள்வனவு செய்தல் | 915.00 | 100% | 50% |
| கடவுச்சீட்டு அச்சிடுதலுக்கு தேவையான ஏனைய நுகர்வுப் பொருட்கள் | 50.00 | 100% | 100% |

- **வருமானம் ஈட்டல் தொடர்பான முன்னேற்றம்**

புள்ளிவிபர அட்டவணை **- 24**

| விபரம் | 2023.01.01 தொடக்கம் 2023.12.31 வரை வருமானம் (ரூ) | 2024.01.01 தொடக்கம் 2024.12.31 வரை வருமானம் (ரூ) |
|---|---|---|
| கடவுச்சீட்டு | 12,521,685,347.67 | 8,865,456,729.23 |
| வெளிநாட்டு தூதுக்குழு | 3,823,247,380.20 | 3,650,172,038.17 |
| இறங்குதுறை | 217,128,121.00 | 255,028,540.20 |
| வீசா | 7,091,134,593.22 | 8,542,843,855.27 |
| இ - சுற்றுலா | 17,739,506,233.12 | 9,536,162,398.49 |
| பிரஜாவுரிமை | 1,381,423,042.21 | 2,921,049,089.20 |
| இ - வீசா | - | 4,232,775,441.24 |
| **மொத்த வருமானம்** | 42,774,124,717.42 | 38,003,488,091.80 |



### 2.3.3. நிதி முன்னேற்றம்

2024 ஆண்டுக்காக குடிவரவு, குடியகல்வு திணைக்களத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை அந்த ஆண்டில் குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் கருமங்களுக்காக கிடைத்த நிதி ஒதுக்கீட்டிலிருந்து செலவு செய்யப்பட்ட சாராம்ச விபரம் கீழே காட்டப்படுகிறது.

புள்ளிவிபர அட்டவணை **- 25**

| **2024** நிதி ஒதுக்கீடு | | **2024.12.31** வரை செலவு | | செலவு வீதம் | |
|---|---|---|---|---|---|
| மீண்டெழும் **(ரூ.மி)** | மூலதன **(ரூ.மி)** | மீண்டெழும் **(ரூ.மி)** | மூலதன **(ரூ.மி)** | மீண்டெழும் | மூலதன |
| 2,651 | 2,596 | 2,371 | 2,285 | 89% | 88% |

### 2.3.4. நிறுவனத்தின் மத்தியகால இலக்கு 2025 - 2027

புள்ளிவிபர அட்டவணை **- 26**

| **நிகழ்ச்சித்திட்டம் / கருத்திட்டம்** | 2025 (மி.ரூ) | 2026 (மி.ரூ) | 2027 (மி.ரூ) |
|---|---|---|---|
| **மீண்டெழும் செலவு** | 5,934.69 | 6,528.16 | 7,093.86 |
| தனிநபர் சம்பள கொடுப்பனவுகள் | 1,179.27 | 1.297.19 | 1,426.91 |
| சம்பளம் மற்றும் வேதனம் | 537.00 | 590.70 | 649.77 |
| மேலதிக நேர கொடுப்பனவு மற்றும் விடுமுறை நாள் கொடுப்பனவு | 15.00 | 16.50 | 18.15 |
| ஏனைய கொடுப்பனவுகள் | 627.27 | 689.99 | 758.99 |
| **பயணக் கொடுப்பனவு** | 75.00 | 82.50 | 90.75 |
| உள்நாடு | 66.00 | 72.60 | 79.86 |
| வெளிநாடு | 9.00 | 9.90 | 10.89 |
| வழங்கல் | 236.91 | 260.60 | 286.66 |
| காகிதாதிகள் மற்றும் அலுவலக தேவைகள் | 70.00 | 77.00 | 84.70 |
| எரிபொருள் | 150.16 | 165.18 | 181.70 |
| உணவு, பானங்கள் மற்றும் சீருடை | 16.75 | 18.42 | 20.26 |
| **பராமரிப்பு செலவு** | 387.68 | 426.44 | 469.09 |
| வாகனங்கள் | 17.68 | 19.44 | 21.39 |
| இயந்திரங்கள் மற்றும் பொறிகள் | 15.00 | 16.50 | 18.15 |
| கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்கள் | 5.00 | 5.50 | 6.05 |
| மென்பொருள் | 350.00 | 385.00 | 423.50 |
| **சேவைகள்** | 4,045.82 | 4,450.41 | 4,808.33 |
| போக்குவரத்து | 5.20 | 5.72 | 6.29 |
| துபால் மற்றும் தொடர்பாடல் | 100.00 | 110.00 | 121.00 |
| மின்சாரம் மற்றும் தண்ணீர் | 308.91 | 339.80 | 373.78 |
| குத்தகை வாடகை மற்றும் உள்ளூராட்சி நிறுவன வரி | 440.70 | 484.77 | 533.24 |
| தூய்மையாக்கல் மற்றும் சுகாதார சேவைகள் | 52.06 | 57.27 | 62.99 |
| பாதுகாப்பு சேவைகள் | 50.00 | 55.00 | 60.50 |
| செயற்பாட்டு குத்தகை முறையில் பெறப்பட்ட வாகனங்களுக்கான தவணை கொடுப்பனவு செலுத்துதல் | 16.33 | 17.97 | 19.76 |
| ஏனையவை | 3,072.61 | 3,379.87 | 3630.73 |
| **மாற்றங்கள்** | 10.00 | 11.00 | 12.10 |
| அரச ஊழியர்களுக்கான சொத்து கடன் வட்டி | 10.00 | 11.00 | 12.10 |
| **மூலதனச் செலவு** | 12,033.73 | 13,237.10 | 14,560.82 |

| | | | |
|---|---|---|---|
| **மூலதன சொத்துக்களை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்துதல்** | 47.18 | 51.89 | 57.08 |
| கட்டிட நிர்மாணம் | 16.10 | 17.71 | 19.48 |
| இயந்திரங்கள் மற்றும் பொறிகள் | 5.00 | 5.50 | 6.05 |
| வாகனங்கள் | 26.08 | 28.68 | 31.55 |
| **மூலதன சொத்துக்களை கையகப்படுத்துதல்** | 7,753.10 | 8,528.41 | 9,381.25 |
| தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 5.00 | 5.50 | 6.05 |
| இயந்திரங்கள் மற்றும் பொறிகள | 2,714.60 | 2,986.06 | 3,284.66 |
| கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்கள் | 0.00 | 0.00 | 0.00 |
| மென்பொருள் அபிவிருத்தி | 5,033.50 | 5,5536.85 | 6,090.53 |
| **ஆற்றல் விருத்தி** | 13.79 | 15.17 | 16.69 |
| ஆளணிப் பயிற்சி | 13.79 | 15.17 | 16.69 |
| **ஏனைய மூலதன செலவுகள்** | 4,219.66 | 4,641.62 | 5,105.79 |
| பயண ஆவணங்கள் மற்றும் தொடர்புடைய பகுதிகள் | 4,169.66 | 4,586.62 | 5,045.29 |
| வருகையின் போது வழங்கப்படும் வீசா ஸ்டிக்கர் | 0.00 | 0.00 | 0.00 |
| கடவுச்சீட்டு அச்சிடுவதற்கு தேவையான ஏனைய நுகர்வுப் பொருட்கள் | 50.00 | 55.00 | 60.50 |
| **மொத்தம்** | **17,968.43** | **19,765.27** | **21,654.68** |

# 2.4. ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களம்

## 2.4.1. அறிமுகம்

1968 / 32 இலக்க ஆட்களைப் பதிவுசெய்யும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தினால் 1972 ஆண்டு தொடக்கம் 18 வயதைத் தாண்டிய இலங்கையில் சட்டபூர்வமாக வசிப்பவர்களைப் பதிவுசெய்தல் மற்றும் அடையாள அட்டை வழங்குதல் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர், 2016 / 8 இலக்க ஆட்களைப் பதிவுசெய்யும் (திருத்த) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய 2016 ஜூலை 07 திகதி தொடக்கம் ஆட்களைப் பதிவுசெய்யும் வயது 15 ஆண்டுகளாக திருத்தம் செய்யப்பட்டது.

ஆரம்பம் தொடக்கம் இலக்கம் 38, கெப்பிட்டிப்பொல வீதி, கொழும்பு 05 எனும் முகவரியில் நிறுவப்பட்டிருந்த ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தின் பிரதான அலுவலகம் 2016 செப்ரெம்பர் 26 திகதி தொடக்கம் பத்தரமுல்ல, ஸ்ரீ சுபூதிபுர வீதியில் ''சுகுருபாய'' கட்டிடத்தில் நிறுவப்பட்டது.

திணைக்களத்தின் ஆரம்பம் தொடக்கம் சிங்கள மொழியில் மட்டும் தேசிய அடையாள அட்டை தயாரிக்கப்பட்ட போதிலும், சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் அடையாள எழுதப்பட வேண்டும் என கோரி உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட SC Application No.93/2013(F/R) இலக்க மனித உரிமைகள் மனுவின் விசாரணை தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கிய உத்தரவுக்கு அமைய 2014.02.28 திகதி தொடக்கம் ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களம் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இருமொழிகளில் தேசிய அடையாள அட்டைகளை வழங்குகிறது.

தற்போது தேசிய அடையாள அட்டைச் செயன்முறையை விரைவுபடுத்தவதற்காக முன்னெடுக்கப்பட்ட இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட முதலாவது நடவடிக்கையாக 2017.10.27 திகதியிலிருந்து சிங்கள், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் தேசிய அடையாள அட்டை (திறன் அட்டை) வழங்கப்படுகிறது.

- **நிறுவனத்தின் பிரதான கருமங்கள்**
  - அனைத்து இலங்கைப் பிரஜைகளினதும் தனிநபர் தகவல்களை சேகரித்து தேசிய தனிநபர் பெயர்ப்பட்டியல் இலத்திரனியல் மத்திய தரவுக் கட்டமைப்பை நிறுவி பராமரித்தல்.
  - தகைமைபெற்ற அனைத்து இலங்கைப் பிரஜைகளையும் நம்பகமாக அடையாளம் காண்பதற்காக தேசிய அடையாள அட்டை வழங்கப்படுகிறது.
  - தேசிய பாதுகாப்பு மற்றும் நாட்டின் அபிவிருத்தி செயன்முறைக்கு வசதி வழங்குதல், சட்ட ரீதியான மற்றும் கொள்கை ரீதியான ஒப்புதலுக்கு அமைய தகவல்களை பரிமாற்றம் செய்தல் மற்றும் அந்த தகவல்களின் உண்மைத்தன்மையை உறுதிசெய்தல்.

- **நிறுவனத்தின் முதன்மைத் துறைகள்**
  - சாதாரண சேவையில் தேசிய அடையாள அட்டை வழங்குதல்.
  - ஒருநாள் சேவையில் தேசிய அடையாள அட்டை வழங்குதல்.
  - தேசிய அடையாள தொடர்

## 2.4.2. நிறுவனத்தின் செயற்பாடுகளின் முன்னேற்றம்

- **நிறுவனத்தின் செயலாற்றுகை சுட்டிகள்**

ஆட்பதிவு திணைக்களத்தினால் நிறைவேற்றப்படும் கருமங்களுக்கு அமைய, அடைவுகளை தெளிவாக அளவிடக்கூடிய 03 பிரதான செயலாற்றுகைச் சுட்டிகள் அடையாளம் காணப்பட்டுள்ளது.

- **வருடாந்தம் சாதாரண சேவையில் கிடைத்த விண்ணப்பங்கள் மற்றும் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளின் எண்ணிக்கை.**

புள்ளிவிபர அட்டவணை **- 27**

| தொ.இல | செயற்பாடுகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 2023.12.31 திகதியில் வழங்க வேண்டிய எஞ்சியுள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 380,957 |
| 2 | 2024.01.01-2024.12.31 வரை கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 742,830 |
| 3 | 2024.01.01-2024.12.31 வரை வழங்கப்பட்ட அடையாள அட்டைகளின் எண்ணிக்கை மற்றும் தகவல் உறுதிப்படுத்தல் கடிதங்களின் எண்ணிக்கை | 871,274 |

- **வருடாந்தம் ஒருநாள் சேவையில் கிடைத்த விண்ணப்பங்கள் மற்றும் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளின் எண்ணிக்கை.**

புள்ளிவிபர அட்டவணை **- 28**

| தொ.இல | செயற்பாடுகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 2024.01.01 - 2024.12.31 வரை கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 280,642 |
| 2 | 2024.01.01 - 2024.12.31 வரை வழங்கப்பட்ட அடையாள அட்டைகளின் எண்ணிக்கை | 288,314 |

(ஒருநாள் சேவையில் அடையாள அட்டை வழங்கல் முன்னேற்றம் வீதத்தில் கணக்கிடப்பட்டால் 100% தாண்டிய பெறுமான கிடைப்பதற்கு பின்வரும் காரணிகள் தாக்கம் செலுத்தியுள்ளது.) எண்ணிக்கை

I. 2024.01.01 திகதிக்கு முன்னர் ஒருநாள் சேவையில் ஒப்படைக்கப்பட்ட போதிலும், அடையாள அட்டையை பெறுவதற்கு விண்ணப்பதாரிகள் இருக்காமை காரணமாக அடையாள அட்டை வழங்கப்பட்ட திகதி மாற்றமடைதல்.

II. தவறுள்ள அடையாள அட்டைகளுக்கு (DU) மாற்றாக மீண்டும் தேசிய அடையாள அட்டை வழங்குதல்.

III. சாதாரண சேவையில் கட்டமைப்பில் சேர்க்கள்ளட்ட சில விண்ணப்பதாரிகளின் கொரிக்கைக்கு அமைய ஒருநாள் சேவையில் கட்டணம் அறவிட்டு அடையாள அட்டை தயாரிக்கப்படுதல்.

- **திணைக்களத்தின் வருடாந்தம் எதிர்பார்க்கப்படும் வருமானம் மற்றும் ஈட்டப்பட்ட உண்மை வருமானம்**

புள்ளிவிபர அட்டவணை **- 29**

| **2024 வருமான மதிப்பீடு ரூ.** | **வருமான பெறுகை ரூ. 2024.12.31 வரை** | **வீதம் %** |
|---|---|---|
| 930,000,000.00 | 1,263,200,450.00 | 135% |

- **2024.01.01 இருந்து 2024.12.31 வரை அடையாள அட்டை வழங்குதலின் ஒட்டுமொத்த முன்னேற்றம்**

புதிய, திருத்த மற்றும் இணைப்பிரதி விண்ணப்பங்கள் - ஒருநாள் மற்றும் சாதாரண சேவை மூலம் வழங்கப்பட்ட எண்ணிக்கை பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகிறது.

புள்ளிவிபர அட்டவணை **-30**

| தொ. இல | செயற்பாடுகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 2024.12.31 திகதியில் திணைக்களத்துக்கு கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 1,023,472 |
| 2 | 2024.12.31 திகதியில் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளின் எண்ணிக்கை | 1,159,588 |
| 3 | 2024.12.31 திகதியில் குறைபாடுகள் மற்றும் வயது பூர்திடயடையாத விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 41,890 |
| 4 | 2024.12.31 திகதியில் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளின் எண்ணிக்கை | 321,100* |

